முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 11—5—56 | வெள்ளி | ஒலி 6

அன்புள்ள அம்மா!

திருச்சியிலே ஏற்பாடுகள் எல்லாம் எப்படியென்று கேட்டு மடல் தீட்டியிருக்கிறாய்!

சென்ற மாதம் அண்ணாவுடன் சென்று மாநாடு நடக்குமிடத்தைக் கண்டேன். அனைவருமே அச்சத்திற்கு ஆளானோம்; அவ்வளவு பெரிய முரட்டுத் திடலை மாநாட்டுப் பந்தலாக மாற்றுவது எங்ஙனம் என்று! பெயரோ பந்தயத் திடல்! பந்தயம் கட்டிக்கொண்டு இடத்தை எழிலாக்கும் முயற்சியில் ஈடுபடும்போதுதான் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும் என்ற வீதத்தில் அமைந்த பந்தயத் திடல்! மீண்டும் இரு முறை திருச்சி சென்றேன். ஒவ்வொரு முறையும் இரண்டு மூன்று நாட்கள் தங்கினேன். பந்தயத் திடல் எம்மை நோக்கி அறைகூவல் விட்டபடிதான் இருந்தது; "பொட்டல் காடாக இருக்கும் என்னை பொலிவுள்ள நகராக மாற்ற உம்மால் இயலுமோ?" என்று! பெருமூச்சுடன்தான் அலைவிட்டுப் பார்த்தோம். திடலை எழிலாக்கும் திறமையற்ற நீங்களா, திரு இடத்தை வளமாக்கப் போகிறீர்கள் என்று நீ திடீரென்று கேட்டுவிடாதே! அப்படிக் கேட்டாலும் உன் கேள்விக்குப் பதில் இதோ செயல் மூலம் கிடைத்துவிட்டது. சென்ற வாரம் திருச்சியிலே நான் கண்ட காட்சி உன் களங்கமற்ற கேள்விக்கு மட்டுமல்ல; தெளிவுற்று, திராவிடத்தை வளமாக்கும் உணர்வுற்றுத் திரியும் மனித ஜீவன்களின் மேலி வழியும் கேள்விகட்கும் சேர்த்து பதில் அளிக்கவல்ல வனப்புமிக்க காட்சியாகும்!

பெருமூச்சுக்கு எம்மை ஆளாக்கிய திடலை அங்கு காணவில்லையம்மா — பெருமகிழ்ச்சிக்கு ஆளாக்கும் வள்ளுவர் நகரைக் கண்டோம்! வேல்களை, ஈட்டிகளை நட்டு வைத்து வீரர்கள் போர்க்களத்தில் கூடாரம் அமைப்பராம்! திருச்சியிலோ, ஆயிரமாயிரம் வேல்களின்மீது அமைக்கப்பட்ட பாசறையாகக் காட்சி தருகிறது நமது மாநாட்டுத்திடல்!

திருச்சி மாநகரமே மாநாட்டுப் பணியில் இறங்கியிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது எனக்கு! ஒரு இடத்திலே நின்றோம் — பந்தல் முழுவதையும் கண்டோம் என்ற திருப்தி நிச்சயமாக யாருக்கும் ஏற்பட முடியாது! எட்டுத் திசையும் நின்று நோக்கினும் துண்டு துண்டாகத்தான் பார்த்து ரசிக்க முடியும். முழுப் பந்தலையும் ஒரே நோக்கில் காண இயலாது; அத்துணைப் பெரிய பந்தல்! பந்தலல்ல; நகர்!

ஆவடி மாநாடு மாதிரி இருக்குமா என்று ஆவலோடு கேட்டிருக்கிறாய்! ஆவடியை நானும் காணவில்லை; நீயுங் காணவில்லை. அப்போதுதானேயம்மா கொடிய கண்நோயினால் மருத்துவ மனையில் நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்—நீ பக்கத்திலே அமர்ந்து அன்புக் கரங்களால் என்னை அணைத்தபடி ஆறுதல் வழங்கிக் கொண்டிருக்கிறாய்!

ஆவடி பார்க்காமலே நான் கண்ணில் புண் பெற்றிருந்தேன், ஆவடி கண்டவர்களில் பெரும்பாலோர் கண்ணிலே புண் பெற்றார்கள் என்ற செய்தியைப் பிறகல்லவா கேட்டுத் தெரிந்து கொண்டோம்! அலங்காரமான முகப்பு ஆலயத்துக் கோபுரம் போல! அதற்கே லட்சத்திற்குமேல் செலவிருக்கும் என்றார்கள். இட்லி சுடுகின்ற அதிசய எந்திரம்; அதைக் காணவே பல்லாயிரவர் கூடினர் நாடெங்கும் அது பற்றியே பேச்சாக இருந்தது! ஏடுகளில் எல்லாம் அமோக விளம்பரம். வழக்கம்போலத்தான் எனினும் வழக்கத்தைவிட அதிகமாகவே! மார்ஷல் டிட்டோ வந்திருந்தார். அகில உலகத்துப் புகழ் பெற்ற அலகாபாத் ஜோதி பண்டித நேருவின் பவனி! இப்படியெல்லாம் அமர்க்களப்பட்ட ஆவடி மாநாட்டில் பந்தல் கிடையாது தாயே பந்தல் கிடையாது. தலைவர்களும் மாநாட்டுப் பிரதிநிதிகளும் அமர்வதற்கு மட்டுமே கொட்டகை. லட்சக் கணக்கில் கூடினர் மக்கள் என்கிறார்களே; அந்த மக்கள் அமர, அமர்ந்து தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க பந்தல் போடவில்லை. இதைக் கேட்க உனக்கே அதிசயமாக இருக்கிறதல்லவா? மாநாடு கூட்டிய தேசியத் தலைவர்களுக்குத் தெரியும்; மக்கள், தலைவர்களின் பேச்சைக் கேட்கவரவில்லை என்பது! அதனால்தான் மக்கள் அமர பந்தல் அமைக்கவில்லை.

ஏதோ அதிசயப் பொருள்களை வேடிக்கை பார்க்க வந்த ஜனத்திரள் மகாமகம் போல—தேர் திருவிழா போல— கூடுகிற கூட்டம், என்ற நினைப்பிலே நடந்த மாநாடுதானேயம்மா ஆவடி மாநாடு!

நமது மாநாடு எழிற்காட்சி மட்டுமல்லவே; எழுச்சி முரசமாயிற்றே! ஆவடி போல இருக்குமா என்று கேட்பதே பொருத்தமில்லையம்மா! ஆவடி—கோயில் விழா! திருச்சி கொள்கை விழா! ஆவடி, ஆதிக்கக்காரர்களின் செல்வாக்கை விளம்பரப்படுத்தும் கண் காட்சி! இது கனக் காட்சி தாயே கனக் காட்சி! என்னையும் பார்த்து விட்டு ஆவடியையும் பார்த்து வரலாமென்று சிலர் — ஆவடியையும் பார்த்து விட்டு என்னையும் பார்த்து வரலாமென்று ஒருசிலர் மருத்துவ மனைக்கு வந்திருந்தார்களே! அவர்களில் ஒருவரிடம் ஆவடி மாநாட்டுப்பாஸ் ஒன்று இருந்தது. நண்பர் ஒருவர் அவருக்குக் கொடுத்தாராம். அந்த நண்பருக்குக் கோவையில் முதலாளி மூலம் கிடைத்த 'பாஸ்' அது! அந்தப் பாஸில்



மாநாட்டுப் பந்தலைத் தாயக்கட்டம் போல் பிரித்துப் பார்த்தால் அதிலே ஒரு கட்டம் வேலை நடைபெறுகிறது.

மில் முதலாளியின பெயரும், அவரளிதத நன்கொடையும் குறிப்பிடப்பட்டிருந்தது,

ஐயாயிரம் ரூபாய்! அந்த நன்கொடையாளர், தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டவர். அவர் அளிக்கிருர் ஐயாயிரம் ஆவடிக்கு! காங்கிரசை எதிர்த்து நின்றவர்! முதலாளி! அவரிடமும் கை நீட்டி வாங்குகிறது காங்கிரஸ்! இருவரில் யாருக்கு வெட்கமில்லை யென்று நாடு தீர்மானிக்காமலிருக்குமா? காங்கிரஸ்காரரல்ல - காங்கிரசை எதிர்த்துப் போட்டி யிட்டவர், ஆலை அரசர்! அவர் தருகிருர் ஐயாயிரம்! பயன கருதாமலா பணக்காரன் வீட்டு இரும்புப் பெட்டி வாய் திறககும்! "பலனுண்டு பிறகு" எனற கண் ஜாடையாவது காட்டாமலா; காங்கிரஸ் கரம் நீட்டி யிருக்கும்! அந்த ஐயாயிரத்துக்கு நாடு அளிக்கும் பட்டம்; நல்லோர் வழங்கும் பட்டம் லஞ்சம்! ஆவடி சூட்டும் பட்டமோ நன்கொடை! இப்படி உருண்டு வந்த வெள்ளிப பணத்தால் அமைக்கப்பட்ட தங்கக் கோட்டையம்மா ஆவடி! அதிலே காமராசர் நடத்திக் காட்டிய நவராத்திரிக் கொலுக் காட்சிதான் தலைவர்களின் வரிசை!

திருச்சி மாநாடு—தாமதமான தற்குக காரணமே நிதிதர வேண்டுமென்ற விருப்ப முள்ளோர் நிறைய நம்மிடமிருக்கிருர்கள், அவர்களிடத்திலே நிதியில்லை என்ற நிலைதானே! காசற்ருேர்; ஆனலும் மாசற்ருேர்! அவர்கள்தான் நமது படைவரிசையில் ஏராளம்! பணுதிபதிகளும் நிலாதிபதிகளும் பாட்டாளியின் ஓங்கிய கரத்தின் நிழல்பட்டுப் பதுங்கிடும் காலம் இது! அந்தப் பொற் காலத்தின் தூதவனுகத் திராவிடத்தில் பணியாறறும் கழகம் நம்முடையது! அணிமணி பூண்டோர் இல்லைதான். ஆர்வத்தின் குன்றுகளன்ருே நம் பணி மனைகளில் எலலாம் குவிந்து கிடக்கிருர்கள்.

மாநாட்டு வரவேற்பு வளைவுத் துண்களில தீட்டப படுவதற்கான வாசகங்களை திருசசி மாநாட்டு அலுவலகத்தில் அமாநது எழுதிக கொண்டிருககிறேன்; அபபோது ஒரு இளைஞன் ஓடி வந்தான். இதையும் எழுதச் செய்யுங்கள் என்ருன் துடிப்போடு! அவனது முகததிலே ஆர்வத்தின் சாயல்! உணாச்சி கொப்பளித்துக் கொண்டிருந்தது அவனது உள்ளத்திலே!

"அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை!" என்று நான் எழுதியிருந்தேன். அவன் கொடுத்த தாளில் இருந்த வாசகம், அந்தச் சின்னஞ்சிறு செல்வனின் ஆசையை அளவிட்டுக்காட்டியது! "ஐந்தே ஆண்டில் திராவிட நாடு!" அவன் எழுதித் தருகிருன் இப்படி! ஐந்தே ஆண்டில் திராவிட நாடு கேட்கும் இவர்கள் இங்கே! ஐயாயிரம் தரும் ஆலை அரசுகள் அங்கே — ஆவடியில்!

வளரும் இயக்கம் எதவென்பதற்கு இதைவிட நல்ல படப்பிடிப்பு வேறென்ன இருக்கிறது! ஐந்தே ஆண்டில்...என்று அழுத்தந்திருத்தமாக எழுதிக் காட்டுகிருன்—இன்று இளைஞன்! நாளை வாலிபன்! விடுதலைப் படையின் தலைவன்! வருங்கால அரசு இயக்குவோரில் ஒருவன்! அவனது ஆசைகள் ஆத்திரமாக மொத்த உருக்கொள்ளாமலிருக்கும்போதே திராவிடநாடு கிடைத்துவிட வேண்டுமென்றுதான் நாமும் பாடுபடுகிருேம்.

"ஐந்தே ஆண்டில்..." என்று அறுதியிட்டுக் கேட்பவனின் அமைதியை அதிக நாள் கட்டிக் காக்க இயலாமல் போய்விடக் கூடாதே என்ற கவலைதான் கழகத்தை நடத்துவோருக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் இந்தக் கவலைக்கு ஆளாகவேண்டியவர்கள் வடக்கத்தி ஆட்சியாளர்கள்! பாவம்; அவர்களுக்கு எப்போதுமே வெள்ளம் வருமுன் அணைபோடத் தெரியாது! வருமுன் காப்போன்—வந்தபின் காப்போன்—என்ற இருவரைப் பற்றிய கதையொன்றை தந்தை அடிக்கடி சொல்வாரென்று என்னிடம் கூறியிருக்கிருயே; அந்தக் கதையிலே வரும் இரு கதாபாத்திரங்களையுமே இநத ஆட்சியாளரோடு ஒப்பிட முடியாது! ஏனெனில்—இவர்கள் வருமுன் காப்பதும் கிடையாது! வந்தபின் காப்பாற்றும் திறனும் பெற்றவர்களல்ல! அதிலும் இது விடுதலை வெள்ளமாயிற்றே! அகிலத்தின் எநத மூலையிலாகட்டும் விடுதலை இயக்கம் நிரந்தரமாகத் தோற்றுவிட்டது என்ற சரித்திரத்தை நீயோ — நானே கேளவிப்பட்டதில்லையே! நேத்திரமற்ற நிலையிலே உள்ள ஆதிக்கக்காரர்களுக்கு விடுதலை அணிவகுப்பு வெறும் தூசாகத்தான் தெரியும். அந்தத் தூசு அவர்களது கண்களையே தூரத்து பார்வையற்றவர்களாக ஆக்கிடும்போதுதான் விழிக்கிருர்கள்; என்ன செய்வது என்று தெரியாமல்!

இந்த வீரமிக்க விடுதலை வரலாறுகளை நான் படிப்பேன்-நீ சுவையோடு கேட்பாய்-அந்த வரலாறுகளில் ஒன்றுக்கு முன்னுரை எழுதியிருக்கிற நமது கழகம் திருச்சியிலே தனது அணிவகுப்பை நடத்திக் காட்டப்போகிறது—நீயும் நானும் பார்த்துப் பரவசமடையப் போகிருேம்!

"நீ இந்த மாபெரும் அணிவகுப்பில் ஒரு வீரனு மகனே! உன்னைப் பெற்ற வயிறு குளிர்ந்ததடா!" என்று உச்சி மோந்து முத்தமிடப் போகிருய் என்னை!

அன்னையே! உனைனப்போலவே ஆனந்தக் கடலில் திளைத்திருக்கும் ஆயிரக்கணக்கான தாய்மார்களைத் திருச்சியிலே வள்ளுவர் நகரிலே காணலாம்!

தியாகத் தழும்புகளைத் தடவி "தீரனே! நீ வாழ்க!" என வாழ்த்துரைக்கும் தியாகவல்லிகள் ஏராளம் அம்மா திராவிடத் தாய்க் குலத்திலே!

"கல்பட்ட காயம் உன் கரம் பட்டுஆறுமம்மா" என்று எத்தனை மாவீராகள் தங்கள் மாதாக்களைப் புன் முறுவலோடு நோக்கியிருக்கிருர்கள். துப்பாக்கி ரவைகள் துளைத்தெடுத்த தங்கங்களின் அங்கங்களைத் தொட்டுத் தடவித் தொல்லை தவிர்த்த வீரத்தாய்கள் எத்தனைபேர்; இந்த இயக்கத்தில்! அவர்களை யெல்லாம் நீ காண்பாய்! என்னைப் பெற்ற உன்னை அவர்கள் காண்பார்கள்! என் தாய்—உன் தாய்—அவர் தாய்—இவர் தாய் என்ற பேதங்களுக்கு இடமே இல்லை அங்கு! பெற்று வளர்த்து, பாலூட்டி, சீராட்டி வளமேற்றி வாழ்வளித்த திராவிடத்தாயின் மடியிலே தவழும் மாணிக்கங்கள் தான் நாமனைவருமே என்ற பாசம் தலைநிமிர்ந்து நிற்குமிடம் நமது கழகம்!

அன்பொழுக—அருள் ஒழுக, "வாடா கண்ணே!" என்று அழைத்து அருகே அமர்த்துகின்ற அண்ணுவின் தாய்! அடிமை மண்ணை மீட்பதற்குத் தலைவனெருவனைத் தந்த வீரமாதா! அந்தத் தலைவனுக்குப் படை வரிசை அளித்திட்ட தமிழகத்துத் தாய்க்குலம்! அந்தக் குலம் விளங்கக் கூடுகின்ற கொள்கைத் திரு நாள்! குன்றெடுக்கும் நெடுந்தோளான் பரம்பரை நாம் என்று குவலயமதிரக் கூறும் பெரு நாள்'

அந்த நாள் எந்த நாளிலும் சிறப்புடையதாக அமையத்தான் அம்மா—திருச்சி பணியாற்றுகிறது!

உன்னைப் போல் ஒரு தாய்; அம்பிலிலே உண்டு! அவள் தந்த கற்கண்டு தருமு எனும் மலர்ச் செண்டு! வரவேற்புத் தலைவரம்மா அவர்! வாய்ப் பேச்சில் மட்டுமே வீரர் என்பாய் நீ கேலிக்கு!

இனி நாம் வாய் மூடிக் கொள்ள வேண்டும்; அவ்வளவு செயல் படைத்த சிங்கமென்று திருச்சியிலே கைவரிசை காட்டுகின்ருர்!

அவர் உறங்குதற்கும் நேரமில்லை—உறங்கினுலும் எழுப்புதற்குப் பக்கத்திலே பராங்குசம். பக்க பலமாக, மணி, முத்து, ஷரீப், ராபி! திருச்சியே செயல் வீரர் கோட்டமாய் விளங்குவதில் வியப்பில்லை. போதாததற்குச் செயல் வீரர் மதுரை முத்து! பந்தலிலே சாம்பு-மலை! பார்வை யிட அண்ணு — நெடுஞ்செழியன்! பார்க்குமிட மெங்கும் மாநாட்டு வேலைகள்தான்! கேட்குமிட மெல்லாம் மாநாட்டுப் பேச்சுகள் தான்! திருச்சி மட்டுந்தானு என்கிருயா? திராவிடத்தின் ஊர் தோறும்—நகர் தோறும், மாநில மாநாடென்றே மூச்சு விடும் காட்சி



தலைவர்கள் அமர்கின்ற மேடைக்கு முன்னுள்ள முகப்புக்கொட்டகை
— ஒரு பகுதி —

[புகைப் படங்கள்: பாண்டியன் புகைப்பட நிலையம், திருச்சி]

தனை நேரிலும் கண்டேன், முடங்கல் பலவற்றிலும் கண்டேன் ;

மலேயாவில் வாழ்கின்றார் மாத் தமிழர் என மனமொடிந்து கூறுவோமே; அவரெல்லாம் மாநாடு காண்பதற்கு வருகின்றாராம்! தென்னிலங்கைச் சீமையிலே தேய்கின்ற திராவிடரும் திரு விளக்கு ஏந்துதற்கு திருச்சிக்கு வருவார்கள்!

ஆமதாபாத்—பம்பாய் — அங்கெலாம் ஆற்றல்மிகு தோழர் உண்டு! நாற்றம் நிறை இடங்களிலே வாழ்கின்றார் வடநாட்டில்! அவர் வாழ்வு மணம் பெறவே அடிமை நிலை வீழ்ந்திடவே அறப் போர்முரசு கொட்டும் திருச்சிக்கு வந்திடுவார்!

வெளிநாட்டில் – விழிக்கூட்டில் நீர் தேக்கி வாடுகின்ற ஒளிநாட்டு மக்களெல்லாம் விடுதலைப் படை காட்டும் திருச்சிக்கு விரைந்திடுவார்!

மாவட்ட அமைப்புகளில் பணி யாற்றும் செயலாளர் அணி வகுத்துக் கிளம்புகின்றார் திருச்சி நோக்கி!



சென்னை இளம்பரிதி.

சென்னையிலே இருக்கின்ற செயலாளர் இளம்பரிதி, அன்னைத் திருநாட்டின் அடிமை விலங்கொடிக்கக் கிளம்புது பார் பட்டாளமென்று திருச்சி நோக்கி அணிவகுப்பை நடத்துகின்றார். அவரைத்தான் உனக்குத் தெரியுமேயம்மா; பார்த்தால் பாட்டாளி ஜாடை, பண்பிலே நல்ல தமிழ் வாடை. உள்ளம் பளிங்கு நீரோடை! இருள் நீக்கும் இயக்கத்தில் அவர் ஓர் இளம் பரிதி!

மாவட்டமாம் திருச்சியின் செயலாளர் தான் மாநாட்டு வரவேற்புத் தலைவரா யிருக்கின்றார். திருச்சி யெனில் நெஞ்சத்தில் ஒரு எழுச்சி தோன்றும் அளவுக்கு பயிற்சி பெற்ற படை வரிசை வைத்திருக்கும் தளபதியாம் தர்மலிங்கம! உமிழ் சிரிப்பும், குமிழ்க் கண்ணும் தமிழ் இனத்தின வீரம் பாடும்! சோரம் போகும் வீடணரை வெகுவாய்ச் சாடும்! அவர் வாழும் மாவட்ட மக்கள் எலலாம் மாநாட்டுப் பந்தலிலே குவிந்திருப்பர்!

தஞ்சை மாவட்ட மெனில்— தாயே! உனக்கு நிரம்பப் பிடிக்குமன்றோ! 'சொந்த மாவட்டமடா தம்பி' யெனறு சொலகின்றாய்; காதில் விழுததான் செய்கிறது. உரக்கக் கூற வேணடாம் அம்மா—உறுமிடுவார் மற்ற மாவட்டத்தார்!

நாட்டுக்குப் பணியாற்றும் நமக்கு எல்லா மாவட்டமும் ஒன்றுதானே! வீட்டுக்கு செலவ

என். எஸ். இளங்கோ.

தற்கும் நேரமின்றி உழைக்கின்ற வீரர்களில் ஒருவரன்றோ இளங்கோ! உத்தம இளைஞரன்றோ! அந்த இலட்சியக் காளை செயலாற்றும் செங்கெற் கொல்லையிலே திராவிட எல்லை மீட்கும் தீரர் பலருண்டு! அவரெலலாம் இளங்கோ தலைமையிலே பறந்துடுவார் திருச்சி நோக்கி!

மதுரை முத்து

மதுரை முத்துதான் மணியோடு பணியாற்றுகின்றார் திருச்சியிலே! அவர் இயக்கத்தின் வீர சொத்தன்றோ! அந்த மாசற்ற மதுரை வீரனின் சீழ் மாவட்டப் பணி புரியும் மாணிக்கங்கள் ஏராளமம்மா! தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று சூளுரைக்கும் சுயமரியாதைச் சுடரமாம அந்தத் தென்பாண்டிக் கடல் முத்து! அவர் அழைத்துவருவார் ஆயிரமாயிரம் தோழர்களின் அணிவகுப்பை திருச்சி நோக்கி!

ஈ. வெ. கி. சம்பத்

கோவைக்கனி — கொள்கைச் சுவையுள்ள கொய்யாக்கனி! அந்தக்கனி தந்த தருவாக ஈரோட்டில் ஒரு தாயுண்டு — அந்தத் தாயீன்ற தங்கம்—தமிழ் காக்கும் சிங்கம்-சம்பத்தின் தலைமையிலே செயலாற்றும் கோவை வட்டாரம், கொள்கைப் பட்டாளம்! முரசு அதிர்ந்ததோ—முக்கடலும் குமுறியதோ எனக் கேட்பர் தமிழ் நிலத்தார் அவர் உரை கேட்டு

விட்டு! அவர் காட்டும் வழி தனிலே விழி வைத்து வீரரெல்லாம் வருகின்றார் திருச்சி நோக்கி!

முல்லை சத்தி

முல்லையிலே மணமுண்டு! நம் இயக்கத்திற்கு அங்கோர் சக்தியுண்டு! அன்பு மொண்டுவரும் பிள்ளையது என்பாய் — 'அம்மா!' என அவர் அழைப்பதிலே புதிய சுவை கண்டு மகிழ்வாய்! இலட்சிய வடிவேல் ஈந்த முல்லைத்தாய் இந்தச் சத்தியையுமன்றோ தந்திட்டார். சத்தியின் செயல் திறனால் வலிவு பூணும் வடார்க்காடு! அவர் வளர்க்கும் மாவட்டக் கழக வீரரெல்லாம் தமிழ் வளர்க்கும் திருச்சி நோக்கி வருகின்றார் நாடு மீட்க!

சாம்பசிவம்

சத்தியோடு சிவமென்பார் புராணப் பித்தர்! புதுமைப்பித்தர்களாம் நம்மிடையே வடார்க்காடு சத்திக்கு நேராக-தென்னார்க்காடு சிவமுண்டு! சாம்பசிவம் எனும் தோழர்! சமருக்கு சளைக்காத நெஞ்சங் கொண்டார்! அவர் வருவார் — அவர் பணியாற்றும் மாவட்டம், மூடப்பனி நீக்க விரைந்து வரும் திருச்சி நோக்கி!

இ. எல். எம். சவுந்திரபாண்டியன்.

பாண்டியன் போனபின்னர் அவர் பெயர் கூற யாருண்டு என நினைத்து ஏங்கும் நமக்கு, பெயரால்-செயலால் பாண்டியனை நினைவூட்டும் சௌந்திர பாண்டியன்! ராமநாதபுர மாவட்டச் செயலாளர்! இளைஞர்-நம் இனவீரர்! அவர் தலைமையிலே அந்த மாவட்டத் தோழரெல்லாம் தொகை தொகையாய்க் கூடிடுவார் திருச்சி நகரில்!

கே. வி. கே. சாமி

தூத்துக்குடி சாமியைத்தான் நாடறியும்—நாமறிவோம்! திருநெல்வேலிச் சீமைக்கு தி. மு. க. செயலாளர்! அவர் பின்னே கொள்கை பிறழாத் தோழர்கள் ஏராளம் அம்மா! திராவிட பூமிக்கு விடுதலையைப் பெற்றுத் தர சாமியின் பின்னே வருகின்றார் பல்லாயிரவர் திருச்சி நோக்கி!

ஜி. பி. சோமசுந்தரம்

சேலத்துக் கிழவர்தான் மாநாட்டுத் திறப்பாளர்—மாவட்டச் செயலாளர் — நமது போர்க் கோலத்தை எதிரிகள் காண்பதற்கு ஏற்ற பணி புரிந்திடும் தாத்தா! உனக்கு அண்ணன் முறையம்மா — அந்தக் கிழவர், சொல்லேருழவர் மட்டுமல்ல — வில்லேருழவர்களை விடுதலைப் படையினிலே நிரப்பியுள்ள தலைவராவார்! அவரோடு சேலமே வருகிறது திருச்சிக்கு!



நாஞ்சில் ஜான்

ஜானைச் செயலாளராகக் கொண்ட சேனை — நாஞ்சில்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சென்னை 11-5-56 வெள்ளி

‘கம்யூனிஸ்டு கடிமணம்’

ஓங்கி வளர்ந்த கட்சி; உலகெங்கணும் உள்ள பிரச்னைகளில் தங்களையும் பின்னிப் பார்த்துப் பெருமைப்படும் இயக்கம் சென்ற கிழமை பாலக்காட்டிலே மாநாடு கூட்டி. தீ பறக்கும்; எரிமலை வெடிக்கும்—அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களிலே, என்று எதிர்பார்த்தோரையெல்லாம் ஏமாற்றமடையச் செய்திருக்கிறது.

ஜெக்கம்போல் அகில உலகக் கண்ணோட்டத்தைச் செலுத்தி ‘கண்ணாமூச்சி’ விளையாட்டு விளையாடிவிட்டார்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள்.

கொள்கையிலே உள்ள குழப்பம்; குடியிருக்கும் மண்ணுக்கும் மனிதர்களுக்கும் ஏற்றாற்போல் இயக்கமேனும் தெப்பத்தை மிதக்கவிடாமை போன்ற செயல்கள் அவர்களை இந்த உபகண்டத்து அரசியலில் சித்திரக் குள்ளர்களாக்கிவிட்டன.

கடலிலே சீறிச் செல்லும் கப்பலை கூவம் ஆற்றிலும் செலுத்திவிட முடியுமா? கடலுக்கு அருகாமையிலிருக்கிறது என்பதற்காக அடையாற்றிலே தோணிகள்தான் போகமுடியும் என்பதை மறந்து, வானத்தை முட்டும் மரக்கலனைத் திருப்பிவிடுவதில் விவேகம் எப்படி இருக்கமுடியும்?

—இதுபோன்ற தவறுகளைத்தான் கம்யூனிஸ்டுகள் செய்து வந்திருக்கின்றனர் இது வரையில்!

வெளிநாட்டுத் தொடர்புகளிலே அவர்கள் செலுத்திய கவனத்தை உள்நாட்டு விவகாரங்களிலே செலுத்த மறந்துவிட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்யம் அவர்களிடமிருந்து தாங்கிக்கொண்ட கணைகளில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட எண்ணத்தில்—ஏன் செயலில் கொஞ்சமும் குறைவில்லாத இந்திய ஏகாதிபத்யவாதிகளை நோக்கித் திரும்பியது கிடையாது.

பாக்தாத் ஒப்பந்தத்தைப் பற்றி பக்தி பத்தியாக எழுதுவர்; அது பாலின்றி வாடும் குழந்தைகளைப்பற்றி எழுதப்பட்ட கட்டுரையின் அளவைவிடக் குறைவாகத்தானிருக்கும்.

‘நாட்டோ’ பற்றி நயம்பட உரைப்பர்; சொந்த நாட்டைப்பற்றி மறந்திடுவர்.

‘சீட்டோ’ பற்றிய செவிக்குணவு வழங்குவர்; முதலாளித்துவ முதலைகளுக்குச் சீட்டு கிழித்து, பாட்டாளி வர்க்கத்தைப் பாதுகாக்கும் பொதுவுடைமைக் கொள்கை எப்படிப்பட்டது என விளக்கிக் கூற மறந்திடுவர்.

இந்த நிலையிலேதான் பொதுமக்களிடையே கம்யூனிஸ்டுகளின் அரசியல் தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

அவர்களுடைய ஏடுகளோ, மேடைச்சொற்பொழிவுகளோ அகில உலக உப்பரிகையை விட்டுக் கீழே இறங்கிவந்து, சமுதாயச் சாக்கடைப் பக்கம் திரும்பி, அங்கே சக்தியற்ற புழுக்களாய்—சாறற்ற சக்கைகளாய் மிதந்துகொண்டிருக்கும் இந்த நாட்டுத் தோழர்களை மீட்டது கிடையாது; வேண்டுமானால் அவர்கள் தொழிலாளி வர்க்கத் தோழரை பொருளாதாரப் பூங்காவுக்கு அழைத்துச் சென்றதாகப் பெருமை படலாம். அதை உண்மையெனக் கொண்டாலும். அவர்கள் அருமைப் பாட்டாளித் தோழனுக்குக் காட்டியது சாதாரண கூலி உயர்வு என்ற காகிதப் பூக்கள்தான் என்பதையும் அவர்களால் மறுக்க முடியாது.

இந்தப் பின்னணியைக் கொண்டு, பார்த்தால் பாலக்காடு பால் நிலவையும், சோலை தழுவும் தென்றலையும் நினைவுக்குக் கொண்டு வரும் கோலமிகுந்ததாக இல்லை; கள்ளிக் காடாகத்தான் காட்சி தருகிறது.

உள்ளங்கை நெல்லிக்கனியென ஒளிவு மறைவின்றி அறிவித்து விட்டார்கள், பண்டித நேருவைக் கர்த்தாவாகக் கொண்டு, உள்நாட்டுப் புண்ணுக்குப் போடப்பட்டிருக்கும் பனுகுப் பூச்சாம் வெளிநாட்டுக் கொள்கைக்கு முழு ஆதரவு தருவதென்று!

தேவையென்று தெரிந்தால் உள்நாட்டு விவகாரங்களிலும் இந்த ஆதரவுக் கரத்தை நீட்டுவதென்றும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

ஆமாம்; பண்டிதர் தயாரித்துக் கொடுத்த பஞ்சசீல லேகியம் பலன் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது! புல்கானினுக்கும், குருசேவுக்கும் அவர் கொடுத்த ஆலிங்கனம் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கண்களிலே மாயப்பொடியைத் தூவியிருக்கிறது!

வெண்புறா பறக்க விவேகமாகச் சொல்லிக்கொண்டு இந்த நாட்டு மக்களின் வேதனையைப் பெருக்கிவருகிறார் பண்டிதர்.

பஞ்சசீலத்தை வாய் கமழப் போற்றுகிறார்களே, அவர்களால் விரல்விட்டுக் கூறமுடியுமா, அந்தக் கொள்கை நமக்குச் சாதித்துக் கொடுத்திருக்கும் நன்மைகளை?

நாய் நரிகளைப்போல நாட்டு மக்களைச் சுட்டுக் கொன்றான் நயவஞ்சகமே உருக்கொண்ட சலாசர்; அவன் கொக்கரிப்பை அடக்கி கோவாவை நமதாக்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் இந்தக் குருட்டு வேதாந்தத்துக்கு ஆதரவு தரும் கம்யூனிஸ்டுகளோ, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள், ‘கோவாவின் விடுதலைக்காக வீரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு’மென்று.

கோவா கொடுமையைப் பார்க்க முடியாதவாறு பஞ்சசீலப் பனிப்படலம் பெருகியிருப்பது தெரிந்தும் வெறும் சண்டைப்புத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள், இந்தக் கம்யூனிஸ்டுகள்!

கோவாவை மீட்கமுடியாத வெளிநாட்டுக் கொள்கை; அதற்கு கம்யூனிஸ்டுகளின் ஆதரவு!

—இது போல பல கோரங்களை நாட்டு மக்கள் பார்க்க முடிகிறது, பாலக்காடு தந்திருக்கிற தீர்மானப் படகில்!

பலியெனப் போரிட்ட வீரன் திடீரென்று எலி மனப்பான்மை கொண்டு, தவம் புரியக் காட்டுக்குச் சென்றுவிட்ட கதை போல இருக்கிறது. இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் நிலையும்!

வேறொரு உண்மை நிகழ்ச்சியும் நினைவுக்கு வருகிறது உதாரணம் காட்ட!

ஹாலிவுட் நகரத்து எழிலரசி ரசவம், எல்லாத் திறனும் பெற்ற ஒப்பிலலா நடிகையாகவும் விளங்கி வந்த கிரேஸ் கெல்லி திடீரென்று தன்னுடைய நட்சத்திர வாழ்க்கையைத் துறந்து விட்டு மொனாகோ நாட்டு இளவரசர் ரெய்னர் என்பாரை சில நாட்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டார்.

உலகெங்கிலுமுள்ள சினிமா ரசிகர்கள் பெருமூச்சு விட்டார்கள். திறமையுள்ள நட்சத்திரம் திருமணம் காரணமாக அஸ்தமித்து விட்டதே என்று!

நல்ல நடிகையை இழந்ததால் பட உலகமே ஆயாசப்பட்டது!

அந்த நிலைதான் இன்றைய இந்திய அரசியல் உலகிலும் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரசுக்கு அடுத்தபடி அகில இந்திய அமைப்பு கொண்ட இயக்கம் இடதுசாரிகளின் நண்பன் என்று நம் எல்லோராலும் நினைக்கப்பட்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, நடிகை கிரேஸ் கெல்லி இளவரசனை மணந்து கொண்டு நட்சத்திர வாழ்க்கையை தொடேன்—என்று ஓடியதைப் போல. காங்கிரஸ் என்னும் கணவனைப் பாலக்காட்டிலே கடிமணம் புரிந்து கொண்டு, ‘இடதுசாரிகளுள் ஒரு நட்சத்திரம்’ என்ற பெயரை இழந்து விட்டது.

கிரேஸ் கெல்லியின் நிலையிலே கம்யூனிஸ்ட் கட்சி!

மொனாகோ இளவரசன் நிலையிலே காங்கிரஸ்!

நல்லதோர் நடிகையை இழந்த ரசிகர்கள் நிலையிலே, கௌரவமான எதிர்க்கட்சி ஒன்றை இழந்த இந்த நாட்டு மக்கள்!

பாலக்காடு தீட்டிக்காட்டும் அலங்கோலக்காட்சி இதுதான் என்பதை நினைக்கும்போது நாமும் உண்மையிலேயே வருந்த வேண்டியவர்களாகிறோம்; அரசியல் எதிர்காலமற்றோராய் மாறியிருக்கும் அன்னாருக்கு நம் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறோம்.

★

பொதுச்செயலாளருக்கு

திருச்சி நகரசபை வரவேற்பு

ஒரேமனதாக முடிவு.

தி. மு. கழகப் பொதுச்செயலாளரும், இரண்டாவது மாநில மாநாட்டுத் தலைவருமாகிய திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, திருச்சி நகரசபை சார்பில் வரவேற்பு அளிப்பதென்று 7—5—56 மாலை நடைபெற்ற திருச்சி நகரசபைக் கூட்டத்தில் ஒரே மனதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

16—5—56 புதன்கிழமை அன்று வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்படும்.

சாம்பல் மேடு!

— ஏ. கே. வில்வம் —

விடிந்தால் திருவிழா!

அந்தக் களிப்பிலே மூழ்கியிருந்தது மதுரை மாநகரம்; வீதிக்கு வீதி வளைவுகளும், வண்ணத் தோரணங்களும கட்டி இரவெல்லாம் நகரை அழகு படுத்திக் கொண்டிருந்தனர். கீழ் வானத்தின் கன்னங்கள் சிவப்பேறின. ஆலயமணி டாண், டாண் என்று பெருஒலி எழுப்பிற்று.

காலை மலர்வதற்குமுன்—சூரியன் சோம்பல் முறித்து எழுவதற்குள் ஆறுகால பூஜை; ஆரத்தி; அபிஷேகம் எல்லாம் முடித்துவிட்டு பூர்ணகும்பமேந்தி, கூடற்கோமானை வாழ்த்தி வரவேற்க கோவில் குருக்கள் புறப்பட்டனர். கொட்டு முழக்கமும்—கொம்பூதிப் புறப்பட்ட வீரர்களின் வரிசையும், வாழ்த்தொலி எழுப்பியவண்ணம் கோலாகலமாகசென்று கொண்டிருந்தன; தங்கத்தாலான முகபடாம் அணிந்த பட்டத்து யானை அசைந்தாடி வந்து கொண்டிருந்தது; அந்த யானையின் மேல் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட அம்பாரியில் மணிமுடி தரித்து; அணிமணி பூண்டு, அரச கோலத்தோடு கம்பீரமாக வீற்றிருந்தான் திருமலை நாயக்கன்! உருவிய வாளும்; உன்னத தோற்றமும் கொண்ட மறவர் படை, அரபி நாட்டுக் குதிரைகளின் மீதேறி அந்தப் பட்டத்து யானைக்கு முன் சென்று கொண்டிருந்தது.

வேதியர்களின் வேத ஒலியும், வீரர்களின் வாழ்த்தொலியும் வான மண்டலத்தையும் எட்டி மேலேசென்றது. இந்த ராஜ ஊர்வலம் பெரிய வீதிகளைக் கடந்து செல்லும்போது, நெடுமாடக் கூடங்களின்மேல் நின்று கொண்டிருந்த அழகு மங்கையர் வண்ண மலர் தூவி மன்னனை வரவேற்றனர்; அந்த அழகு ஊர்வலம் அரண்மனையை வந்தடைந்த போது,

கூடற் கோமான் வாழ்க!

எம் கொற்றவன் ஆட்சி செழிப்பதாக!

திருமலை நாயக்கன் வாழ்க! வாழ்க!

என்ற பெரொலி எழுந்தது. கோட்டைச் சுவர்களில் வீரர்கள் முரசறைந்து ஆர்த்தனர்; அகமும் முகமும் மலர்ந்து வாழ்த்தினர்.

★

கொலு மண்டபம் அன்று கோலாகலமாகக் காட்சியளித்தது. திருமலை நாயக்கன் கம்பீரமாக நடந்துவந்து சிம்மாசனத்தில் உட்கார்ந்தான். அவையோரின் விழிகளெல்லாம் அரங்கத்தில் திரும்பின. சிலம்பு குலுங்க, சிற்றிடை துவள, சலங்கை சிலும்ப, அலம்புமணி மேகலை அசைந்தாட, அழகே உருவெடுத்து வந்தது போல், அத்தாணி மண்டபத்தில் நுழைந்த திலகா — அபிநயம் பிடிக்கின்ற பாவனையில் மன்னவனையும், அவையோரையும் சிரம் தாழ்த்தி வணங்கினாள். அடுத்த விநாடி—மாதுளை இதழ் பிளந்தது முத்துநகை புரள; சித்திர விழி வேல் உருள, இத் தரை மீதினில் இவள் பேரெழிலுக்கு ஈடுண்டோ? இணையுண்டோ? என்றெண்ணும்படி நவரசத்தையும் நளின நெளிவால், நயன அசைவால் சிருங்கார பாவங்களாகக் கொட்டினாள்!

சேல்விழி சிவக்க, சிறுநுதல் வியர்க்க, ஆண்டாள் பாசுரம் ஒன்றுக்கு அபிநயம் பிடித்தாடி; அவையோரை உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்து மன்னவன் முன் வணங்கி நின்றாள்!

அதுவரை அசைவற்ற சிலை போல தன்னை மறந்து அரியணையில் வீற்றிருந்த திருமலை நாயக்கன், எங்கோ ஒரு இன்ப உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவனைப் போல் சுயநினைவு பெற்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

★

"திலகா, ஆடற் கலைக்கே உயிர் அளிக்க வந்தவள் நீ! உன் கலைத் திறமைக்கு நாயக்க வம்சமே மதிப்பளிக்கிறது; உன்னை அரண்மனை ஆடலழகியாக ஏற்றுக் கொள்வதில் மதுரை அரசு பெருமைப்படுகிறது. உன் கலைவிருந்துக்கு என் பரிசு, இதை பெற்றுக் கொள்!" என்று கூறி விலையுயர்ந்த நவரத்தின மாலையும்; பட்டும் பொன்னும் பரிசளித்தான்.

"மன்னவரே—தங்கள் அரசு கட்டில்; கலை வளர்க்கும் தொட்டில்! அதிலே தவழும் சிறு குழந்தைநான்; எனக்களித்த பெருமைக்கு நான் கொடுத்து வைத்தவள்; தங்கள் ஆணையை சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்வேன். நாயக்க வம்சத்திற்கு நான் என்றும் கடமைப் பட்டவள்." என்று கூறிவிட்டு பணிவன்போடு விடைபெற்றுக் கொண்டு, அரண்மனை வாயிலிலே காத்திருந்த முத்துப் பல்லக்கிலேறி தன் மாளிகைக்குத் திரும்பினாள்.

★

"கனவொன்று கண்டேன் காவலா! எவராலும் தீர்க்க முடியாத அந்தப் பெரு நோயை—உம் இதயத்தை அணு அணுவாக அரித்துக்கொண்டிருக்கும் அந்த காச நோயை தீர்ப்பதற்கு மருந்தொன்று கிடைத்துவிட்டது!"

"என்ன சொல்லுகிறீர்கள்!"

"ஆம்; மீனாட்சியின் கருணை! மனமிளகி விட்டாள் மகேஸ்வரி; மன்னர் தங்கள் நோய்போக மார்கம் கூறிவிட்டாள்"

"உண்மையாகவா? என்ன சொன்னாள்"

"நேற்றிரவு என் கனவிலே தோன்றினாள்; 'இராமய்யா! உம் மன்னன் திருமலை பிழைக்க ஒரே வழிதான் இருக்கிறது; உடனே தலைநகரை தஞ்சையிலிருந்து மதுரைக்கு மாற்றிவிடச் சொல்; நான குடி கொண்டிருக்கும் மதுரை மண்ணிலே திருமலையின்செங்கோல் நிமிரட்டும்! என்னை பக்தியுடன் சேவிப்பதால் அவனை பீடித்துள்ள காச நோய் தீரும். சாந்தி பெருவான் உம் கொற்றவன்—அவன் சஞ்சலம் தீரும்!" இப்படிக் கூறிவிட்டு மறைந்தாள் மீனாட்சி! ஜெகஜ் ஜோதி போல் தோன்றி என் முன்னால் அவள் நின்று இதைக் கூறியபோது, நான் என் சொல்வேன், மன்னா! நான் மெய்மறந்து போனேன்; என் உடலின் ஒவ்வொரு அணுவும் சிலிர்த்தது. ஓடோடி வந்தேன் இந்த உயிர் காக்கும் செய்தியை தங்களிடம் சொல்வதற்கு; இனியும் கால தாமதம் வேண்டாம் காவல! தலைநகரை உடனே மதுரைக்கு மாற்றிவிட ஆவன செய்யுங்கள்;"

★

திருமலை நாயகன் அரசு கட்டில் ஏறுவதற்கு முன்பே அவன் காச நோயால் வருந்தினான்: எத்தனையோ வைத்தியர்கள், சித்தர்கள், முனிவர்கள் பார்த்தாகிவிட்டது-இது தீர்க்க முடியாத நோய்; மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்று கூறி உதட்டைப் பிதுக்கியபடி வெளியேறி திரும்பினர்; தனக்கு வந்திருப்பதோ தீர்க்க முடியாத காச நோய் என்பதை நினைக்கும்போது வேதனைக் காடாகிவிடும் அவன் நெஞ்சத்தில்; இராமப்பய்யர் கூறிய இந்த வாசகங்களைக் கேட்டபோது ஏதோ ஒரு நம்பிக்கை; எப்படியாவது நோய் தீர்ந்தால் போதும் என்ற நப்பாசை அவனைத் தூண்டிற்று; அந்த வாசகங்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் பயங்கர ரகசியத்தை அவன என்ன கண்டான் பாவம்; எனவே தலையசைத்தான்.

தஞ்சைத் தரணியிலே இருந்து தலைநகரம் மதுரைக்கு மாற்றப்பட்டது. அந்த விழாதான் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த பெருவிழா! மதுரை மாநகரமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய நல்ல நாள்; உயிர் பறிக்கும் நட்சத்திரத்தின் மினுமினுப்பை தேக காந்தியாக்கிக் கொண்ட பேரழகி, திலகாவின் நடன விருந்தும் அன்று நான மன்னன் திருமுன்னர் அரங்கேறிற்று! அந்த ஆட்டக்காரியின் முகத்திலே தோய்ந்திருந்த களங்கமில்லாத ஒரு கவர்ச்சி — திருமலை நாயக்கனை கவர்ந்துவிட்டது; அந்தக் கன்னிக் கினியாளின் கண்ணொளியிலே மதி மயங்கிப் போனான் மன்னன்! பொதுவாகவே உடல் வலிமை குன்றியவர்களுக்கு உணர்ச்சி அதிகம் என்பார்கள்; காச நோயால் நாளுக்குநாள் தேய்ந்து கொண்டிருந்த திருமலையாலும் உணர்ச்சிகளை கட்டுக்கு கொண்டுவரமுடியவில்லை; ஏற்கனவே இருந்த இதய வலியோடு இந்தப் 'புதிய' வலியும் சேர்ந்து கொண்டது. இந்த மன அவஸ்தையால் மன்னன் நிம்மதியின்றி காணப் பட்டான். அன்றிரவெல்லாம் 'அவள்' நினைவாகவே நிலா மாடத்தில் உலவிக் கொண்டிருந்தான். பால்போன்ற நிலா அவன் போதையைத் தூண்டிவிட்டது. பொல்லாத தென்றல் வேறு அவன் இதய தாபத்தைக் கிளறி கிறுகிறுப்பை உண்டாக்கி விட்டது! பூ விரித்த மஞ்சம் அந்த ஒருவளுக்காகவா, சே! அவன் நினைவலைகள் கொந்தளித்தன; திலகா, அவன் கண் முன்னால் எழில் விரிக்கும் நினைவு ரோஜாவாக தோன்றி மறைந்தாள்! வான மண்டலத்தின் நட்சத்திரக் கூட்டங்களை அண்ணாந்து பார்த்தான் திருமலை; உள்ளத்தில் உணர்ச்சிக் குழம்பு பீறிட்டது, அந்த ஆடலழகியின் பருவச் செழிப்பு பாலைவனத்து நிலவாகத்தான் வீணாக வேண்டுமா? அந்த கரம்படா முல்லை காய்ந்து உதிரும் சருகாகிப் போவதுதான் நியாயமா? அந்த பறித்து தின்ன வேண்டிய பழக்குலை புழுதி மேட்டிலே சாறற்று உதிரத்தான் வேண்டுமா?

தேவர்க்கு தாசியாம் — அந்தத் தேன் கதலி! அறிவு கெட்ட மானிட ஜாதி; இதயத்தைக் கொன்றுவிட்ட கோவேறிக் கழுதைகள் வகுத்து விட்ட சட்டம்! அதை உடைத்தெறியத்தான் போகிறேன்; என் கொற்றம் பறிக்கப் பட்டாலும், இந்த, குவலயமே நின்றெதிர்த்தாலும் அந்த உயிர் சித்திரத்தை சமுதாயத்தின் காலடியிலே நசுங்கிக் கொண்டிருக்க விடமாட்டேன்; அந்த மலர்ச் செண்டு இதோ வெறிச்சென்று கிடக்கும் இந்த மஞ்சத்தில் மணம் பரப்பினால்......?

அதற்குமேல் அவன் சிந்தை குழம்பிற்று. நிலா மாடத்திலிருந்து வேகமாக இறங்கிச் சென்றான். சாதாரண குடிமகனைப் போல மாறுவேடம் அணிந்து கொண்டு புறப்பட்டான். நள்ளிரவு; நாடான

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

பேனா ஓவியம்

(9-ம் பக்கம்)

வெள்ளிக் கிழமை

4

சி...தாமணி கண்ட இன்பக் கனவுகளின் எழிலுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல; அழகப்பனின் ஆசைக் கனவுகள்! விரிந்து பரந்து கிடக்கும் தன்னுடைய மாளிகையிலே சதா சர்வ காலமும் சதங்கையணியாத மயிலொன்று நட்டுவனுர் பயிற்றுவிக்காத நாட்டியத்தை நடை மூலம் ஆடிக்காட்டும் அற்புதக் காட்சியைக் கண்டு களிக்கலாம் என எண்ணி மகிழ்ந்தான். காதல் எண்ணங்கள் யாத்ரீகர்களைப் போல வருவதும், தங்குவதும் பிறகு போய் விடுவதுமாக இருந்த அவனது இருதயச் சத்திரம், இனிமேல் இடித்துப் புதுப்பிக்கப்பட்டு எப்போதுமே காதல் நினைவுகள் காவல் புரியும் கோட்டையாக மாற்றியமைக்கப் பட்டு விடும், அவனது அம்மா தன் கண்களை மூடுவதற்குள் பிள்ளைக்கு ஒரு சல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

அவனே, தன் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்திலே வாழ்க்கைத்துணை தேவை யென்று விரும்பி நின்ருன். அவனது விருப்பத்தைப் பூர்த்தி செய்வது போலத்தான் வேதபுர மிருந்து வந்த அந்தப்படம் அமைந்தது. படத்தைக் கையிலே வைத்துக் சொண்டு அந்த விழி அசைந்தால் எப்படி யிருக்கும்; இதழ்கள் திறந்தால் எழிற்காட்சி எப்படிக் கொட்டும், என்றெல்லாம் கற்பனை சாம்ராஜ்யத்தைப் படைத்து ரசித்தக் கொண்டிருந்தான். பெரிய வீட்டுப் பிள்ளை! ஒய்வைக் கழிப்பதே அவர்களுக்குப் பெரிய தொல்லை! அந்தத் தொல்லை தவிர்க்க ஒரு கிள்ளை வருகிறது வேதபுரமிருந்து! அவளை ஒரு முறை எப்படியாவது நேரிலே பார்த்துவிட வேண்டு மென்று துடித்துக் கொண்டிருந்தான். பெண்வீடு பார்ப்பதற்குத் தாயார் மட்டுமே போவதாக இருக்கிருள். அவளுக்குத் துணையாக அவனது நண்பன் நயினு செல்வதாக இருக்கிருன்; நயினு என்பது நயினு முகம்மது என்ற பெயரின் சுருக்கம் அழகப்பனும் நயினுவும் ஆருயிர்த் தோழர்கள்; ஒரே தெருவினர். ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். ஒரே மாதிரி இருவரும் பரீட்சையில் 'சுழி' வாங்குபவர்கள்! அழகப்பன் உலகத்தை அதனுடைய சுற்றளவுக்குமேல் பெரிதாக மதிப்பவன். நயினுவுக்கோ உலகம் ஒரு விளையாட்டு மைதானம். அழகப்பன் எதையுமே ஆழ்ந்து சிந்திப்பான். நயினுவோ எல்லாவற்றையும் அலட்சியப்படுத்தி விடுவான். வாழ்க்கை யென்பது மனிதன் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டிய சிங்காரச் சோலை! இது அழகப்பனின் தத்துவம்.

சோலையானுலும் பாலையானுலும் சோர்ந்து போகாமல் மனிதன் கடக்க வேண்டிய பாதைதான் வாழ்க்கை யென்பது நயினுவின் முடிவு!

இந்த இருவரின் முடிவுகளும் அடிக்கடி மோதிக்கொள்ளும் அப்போதெல்லாம் அழகப்பன் வேகமான கருத்துக்களுக்கு அடிமையாகி விடுவான். நயினுவுக்கோ அந்த மோதல் நிகழ்ச்சி ஒரு நகைச்சுவை நாடகமாகயிருக்கும் அந்த நாடகத்தில் தன்னைத் தலைமைப் பாத்திரமாக்கிக் கொண்டு, அழகப்பனை சிரிக்கவைப்பதில் முழு முயற்சி எடுத்துக்கொண்டு முடிவில் வெற்றிபெறுவான் நயினு முகம்மது!

வேதபுரத்துப் பயணம் பற்றி நயினுவிடம் பேச்செடுத்தான் அழகப்பன். எப்படியாவது தானும்போய் பெண்ணைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென அவனிடம் மெல்ல மெல்ல விஷயத்தை வெளியிட்டான்.

"படம் பார்த்தாயே; அது போதாதா?" என்று கேலி பேசினுன் நயினு.

"படம்; அசையாது! பேசாது! சிரிக்காது!" என்ருன் அழகப்பன்.

"ஓகோ! அசைவிலே அன்னமா மயிலா என்று தெரிந்து கொள்ள வேண்டுமாக்கும்! பேச்சிலே கிளியா? குயிலா? எனத் தெரிய வேண்டும் — சிரிப்பிலே முல்லைச் சரமா? முத்தாரமா? என்று பார்த்துவிட வேண்டும்—இல்லையா?"

நயினுவின் கேலி அதிகமாயிற்று! அழகப்பன் வெட்கத்தால் தலை குனிந்தான்.

"என்னப்பா இதற்கெல்லாம் போய் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு!......மொட்டைத் தலையில் வெயில் படாமல் இருக்க ஒரு குல்லாய் வேண்டுமே தவிர அந்தக் குல்லாய் பட்டினுல் செய்யப்பட்டு பளபளப்பான ஜரிகை நெய்யப்பட்டு...இருக்க வேண்டுமா என்ன? அது மாதிரி... வாழ்க்கைக்கு ஒரு பெண்! அவ்வளவு தானே!"

"ஏய், நயினு! மொட்டையடித்துக் கொள்ளாமலே யிருந்தால் அந்தக் குல்லாய்கூட தேவையில்லையே!"

"மொட்டையடிப்பது மத சம்பிரதாயம்! அது போல கல்யாணம் வாழ்க்கை சம்பிரதாயம்!"

"அப்படியானுல் குல்லாய் போடுவது...?"

"வாழ்க்கை சம்பிரதாயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், குல்லாய் போட்டுத்தான் தீர வேண்டும்! சில பேர் மொட்டையடிக்காமல் கிராப்புத் தலையுடனேயே குல்லாய்போட்டிருக்கிருர்களா இல்லையா; அது போலத்தான்! அழகப்பா இந்த இடத்தில் குல்லாய் என்பது பெண்ணைக் குறிக்கும்!"

"தலைக்குக் குல்லாய் போல அல்ல; குடும்பம் நடத்த வருகிற பெண்!"

"பிறகென்ன; கிரீடமா? அழகப்பா! எனக்குத் தெரியும், தலைக்கு தொப்பி போல வருகிற எத்தனையோ பெண்கள் கடைசியில் காலுக்குச் செருப்பு போல, தேய்ந்து கஷ்டப்படுவதை நான் பார்த்திருக்கிறேன்!"

"சரி சரி! உன் ஆராய்ச்சியை வளர்த்தாதே! தயவு செய்து நிறுத்து!"

"ஆராய்ச்சியில்லையப்பா-அனுபவஉண்மை! என்னமோ-உனக்கு உன் ஆசைப்படியே ஓவியம் போல ஒரு பெண் கிடைத்திருக்கிறது—அந்த ஓவியம்; பேசுமா—பேசாதா? சிரிக்குமா? சிரித்தால் பல் இருக்குமா—இருக்காதா?—நடக்குமா? நடக்கக் கால்உண்டா? நொண்டியா? — இவைகளையெல்லாம் நாங்கள் பார்த்துவிட்டு வருகிறோம். நீ கவலைப்படாமல் இரேன்!"

"நயினு உனக்கு எல்லாம் விளையாட்டுதான்! நீ பெண்ணைப் பார்க்க முடியாது!"

"ஏன் — எங்களைப் போல 'கோஷா' முறை ஏதாவது உண்டா?"

"அதெல்லாமில்லை—என்மாமனுர் பெரிய சனுதன இந்து! உன்னை உள்ளே அனுமதிப்பது கூட சந்தேகந்தான்!"

"உண்மையாகவா; அல்லது நீ வரவேண்டுமென்பதற்காகப் புளுகுகிருயா?"

"உண்மைதான் நயினு; உண்மைதான்!!"

"அப்படியானுல், நான் கைலியில்லாமல், குல்லா யில்லாமல் போகிறேன்!"

"இந்துவென்று எண்ணிக் கொள்வாரா மாமனுர்? பைத்தியக்காரா? தலை மொட்டையாக இருக்கிறதே; அது காண்பித்துக் கொடுத்து விடாதா?"

"திருப்பதிக்குப் போனதாகச் சொல்லி விடுகிறேன், என்ன அழகப்பா, எனக்கே நீ காது குத்துகிருய்!"

"டேய்! காது வேறு குத்திக் கொள்ள வேண்டுமடா—இந்து எனருல்!"

"காது குத்துகிறவன் தான் இந்து என்று எனக்குத் தெரியும்! குத்திக் கொண்டால் போகிறது! மனிதனுக்கு மனிதன் ஆண்டவன் படைத்த அவையவங்களை சில மாறுதல் பண்ணிக் கொள்வது தானேடா மதம்!"

"சரி! சரி! மத ஆராய்ச்சியிலே இறங்கி விட்டாயா? உருப்பட்ட மாதிரிதான்!"

"எந்த ஆராய்ச்சியில் இறங்கினுலும் சரி; கடைசியில் வேதபுரத்துக்குப் போவது நானும் உன் அம்மாவுந்தான்!"

"அம்மாவுக்கு அரைப்பார்வை! பெண்ணை சரியாகக்கூட பார்த்து வரமுடியாது!"

"ஓகோ-நீ போனுல் சரியாகப் பார்த்துவிட்டு வந்துவிடுவாயோ? அப்பனே அழகப்பா! இது 'அவாள்' வீட்டுப் பெண்ணல்ல; மாப்பிள்ளைக்கு நேராக பாட்டுப்பாடி, நடனமாடி, கற்ற வித்தைகளை யெல்லாம் காட்டி கல்யாணத்துக்கு சம்மதம் பெற! அம்மா பார்க்கிற அரைப்பார்வை கூட உன்னுல் பார்க்கமுடியாது!"

"நயினு! ஒரே முடிவாகச் சொல்லுகிறேன்; நான் வந்துதான் தீரவேண்டும்!"

"உங்க மாமனார் வேற கடிதம் எழுதியிருக்கிறார்; மாப்பிள்ளை வரவேண்டாம் - வந்தால் ஊரில் திருஷ்டி அதிகமானாலும் ஆகும் என்று! அதோட நீ அந்த வீட்ல இந்த மாதம் அடிவைக்கக் கூடா தாம்! உங்க அம்மாதான் அடி வைக்கலாமாம்-அதுமாதிரி பஞ் சாங்கத்திலே போட்டிருக்காம்!"

"அந்தப் பஞ்சாங்கத்தைக் கிழித்து எறி! நெருப்பிலே போடு!"

"அதில் புண்யமில்லை! நீ மந் திரியா வந்து பஞ்சாங்கமே வெளி யிடக்கூடாதுன்னு தடை போடு!"

"நயினா, நானும் புறப்படு கிறேன் வேதபுரத்துக்கு! அம்மா விடம் நான் சொல்ல வெட்கமா யிருக்கிறது. நீ சொல்லி விடு"

அழகப்பனின் பிடிவாதத்தை மாற்ற இயலாதெனக் கண்டு கொண்ட நயினா பின் வாங் கினான். தாயாரின் அபிப்பிரா யப்படி ஜோசியர் குறித்துக் கொடுத்த நாளில் வேதபுரம் புறப் படுவதற்குத் தீர்மானமாயிற்று. அழகப்பன், நயினா, தாயார் மூவ ரும் மோட்டாரில் புறப்பட்டனர்; வேதபுரத்திற்குத் தந்தி கொடுத்து விட்டு!

வெள்ளிக்கிழமை முற்பகல் வேதபுரம் சேர்ந்துவிட வேண்டு மென்ற முடிவில், பெங்களூரை விட்டு இரவே புறப்பட்டு விட் டனர். பெங்களூருக்கும் வேத புரத்திற்கும் முந்நூறு மைல்க ளாவது இருக்கும். வயதான தாயார் காரில் இருப்பதால் மெது வாகத்தான் காரை ஓட்ட இய லும்! வேடிக்கைக் கதைகள் பேசியவாறு அழகப்பனையும் அவன் தாயாரையும் உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தான் நயினா. பொழுது விடியப்போகிற நேரம். பெண் வீடு பார்க்க வரு கிறவர்களை எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தாளே சிந்தாமணி, அந்த நேரம்! அப்போதுதான் அழகப்பனின் கார் வேதபுரம் நோக்கி நூறுவது மைலில் மெது வாக வந்து கொண்டிருக்கிறது.

தாயாரம்மாள் களைப்பின் மிகு தியால் காரில் சாய்ந்தவாறே சிறிது கண்ணயர்ந்தாள். டிரை வருக்கு அசதியாக இருக்கு மென்று, அவனுக்கு ஓய்வு கொடுத்து விட்டு அழகப்பனே கார் ஓட்ட ஆரம்பித்தான்.

"உன் அவசரத்தில் காரை வேகமாகவிடாதே அழகு! அம்மா வேறு தூங்குகிறார்கள்" என்று கிண்டலாக எச்சரித்தான் நயினா. எத்தனையோ நாள் கார் ஓட்டி யிருக்கிறான் அழகு! ஆனால் இப் போது ஏற்படும் தனி உற்சாகம் என்றுமே ஏற்பட்டதில்லை! அரு கேயிருந்த நயினா அவனது மன உற்சாகத்தைப் புரிந்து கொண்ட வன் போல—

"இன்னுங் கொஞ்சநாள் போனால்; பெங்களூரில் இந்தக் கார் என்ன பாடுபடும்; பக்கத் திலே நானா உட்கார்ந்திருக்க முடியும்?" என்று சிரித்தான்.

"ஏய் — அம்மா!" என்று சைகை செய்தான் அழகப்பன்.

"அம்மா தூங்குவது தெரியவில் லையா?" என்று கேட்டபடி நயினா மீண்டும் ஆரம்பித்தான்,

"அழகு! நான் ஒரு கேள்வி கேட்கிறேன்; பதில் சொல்! ஒரு வெள்ளைக்காரனும் வெள்ளைக் காரியும் காரில் போய்க்கொண்டி ருந்தார்களாம். கணவன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். பக் கத்திலே மனைவி! கார் போய்க் கொண்டிருக்கும்போதே அருகே யுள்ள மனைவிக்கு அவன் ஒரு முத்தம் கொடுத்தானும்—முத்தம் பெற்ற அவள் கேட்டாளாம்; "நீங்கள் முத்தம் தரும்போது உங்கள் கவனம் என் கன்னத்தில் இருந்ததா? அல்லது எதிரில் உள்ள சாலைமீது இருந்ததா?" என்று! நீயாயிருந்தால் அதற்கு என்ன பதில் சொல்லியிருப்பாய்; சொல்லு பார்க்கலாம்!"

"உன் கதையை அனுபவித்துப் பார்த்துவிட்டுப் பிறகு உன் கேள் விக்குப் பதில் சொல்கிறேன்!"

"பெங்களூரில் கார் மோதி எதிரே வந்த ஒரு ஆளுக்கு தலை காணுமல் போய்விட்டது என்று ஒரு சேதி பத்திரிகையில் வந் தால்-அன்றைக்கு நீ என் கேள் விக்குப் பதில் தேடியிருக்கிறாய் என்று அர்த்தம்! இல்லையா?"

"அப்படியானால் என் கவனம் சாலைமீது இருக்காது என்கி றுயா?"

அழகப்பன் இப்படிக் கேட்கும் போதே கார், ஒரு மரத்தின்மீது மோத இருந்து தப்பியது! நயினா சிரித்தபடி அழகுவைத் தட்டிக் கொடுத்தான்.

இன்னும் தொண்ணூறு மைல் கள் வேதபுரம் என்பதை ஒரு கைகாட்டி அறிவித்தது. கைகாட் டியைத் தாண்டி சிறிது தூரம் சென்றதும் சாலை குறுகி இரு மருங்கிலும் புதர் அடர்ந்து காணப் பட்டது. குறுகிய சாலையில் கார் பிரவேசித்தது. இதயத்தை வேத புரத்திற்கும் காருக்குமாக அலைய விட்டுக்கொண்டிருந்த அழகப்பன் திடீரென காரை நிறுத்தினான், "என்ன என்ன?" என்றான் நயினா. தாயாரம்மாளும் விழித் துக்கொண்டாள். சாலையின் குறுக்கே ஒரு மனித உருவம் கிடந்தது.

"யாரோ அடிபட்டு செத்திருக் கிறான்" எனக் கூறியபடி அழகப் பன் காரை விட்டு இறங்கினான். அவன் இறங்கியதுதான் தாமதம் பெருங்கூச்சலோடு ஏழெட்டுப் பேர் காரை வளைத்துக் கொண் டார்கள். சாலையின் குறுக்கே கிடந்தவனும் பயங்கரச் சிரிப் போடு எழுந்து விட்டான். அழ கப்பனுக்கும் நயினாவுக்கும் இன் னது செய்வதென்றே புரிய வில்லை. தாயாரம்மாள் அலறி னாள். "அய்யோ! எங்களை விட் டுடுங்க!—நீங்க கேட்கிறதெல் லாம் தர்றோம்!" என்று கெஞ்சி யழுதாள். "என்னையாவது கொன்னுடுங்க! என் பிள் ளையை ஒன்னும் பண்ணாதிங்க!" என்று தாய்ப்பாசத்தின் உயர்வை வெளியிட்டு ஒப்பாரி வைத்தாள்.

நயினாவின் முதுகில் ஒரு குத்து விழுந்தது. நயினாவும் அவர்களை எதிர்க்க ஆரம்பித்து விட்டான். அழகப்பனுக்கும் வேறு வழி யில்லை. கார் டிரைவரும் களத் தில் இறங்கினான், சாலையில் சிறியதோர் போர்க்களம் உருவா யிற்று. ஏழெட்டு பேரை மூவர் மட்டுமே எவ்வளவு நேரந்தான் எதிர்க்க முடியும். அதுவும் நகர ரின் இளஞ்சோறு சாப்பிட்டு உடலைக் கொழுக்க வைத்துக் கொண்ட கூட்டம்! அழகப்பன் அவர்களை சமாளிக்க முடியாமல் தவித்தான்.

திடீரென்று நயினாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. காரின் முன் பகுதியில் பாய்ந்தான். அங் கிருந்த ரிவால்வரை எடுத்து, "அழகப்பா! இந்தா! சுடு! சுடு!" என்று கத்தியவாறு அவனிடம் தூக்கி எறிந்தான். ரிவால்வர் அழகப்பனின் கைக்கு வந்ததும் டைகரின் ஆட்கள் பயந்தவாறு நயினா இருக்கும் பக்கம் ஓடி வந் தனர். "ம்! ஓடி விடுங்கள்! சுட்டு விடுவேன்!" என்று எச்சரித்தான் அழகப்பன்! முரடர்கள் "எங்களை சுட்டால் இவனைக் கழுத்தை நெரித் துக் கொன்று விடுவோம்!" என்று கத்தியவாறு நயினாவைச் சூழ்ந்து கொண்டனர். நயினா, கள்ளாடிய படியே அவர்களை எதிர்த்தான். "இனிப் பொறுக்க முடியாது! சுட வேண்டியதுதான்!" என உரக்கச் சொல்லிக் கொண்டே ரிவால்வரை முடுக்கினான் அழகப்பன்! இரண்டு வெடிச் சப்தம்! "அய்யோ!" என் னைக் கொன்று விட்டாயே அழ கப்பா!" என்று கதறியவாறு நயினா முகம்மது தடால் என்று கீழே சாய்ந்தான்! அழகப்பன் உடல் நடுங்கிற்று! அசைவற்றுப்போனான். தாயாரம்மாள் அடித்து மோதிக் கொண்டு அழுதாள். முரடர்கள் பின்னங்கால் பிடரியில் இடிபட ஓட ஆரம்பித்தார்கள்!

அழகப்பன், ரிவால்வரைக் கீழே போட்டு விட்டு நயினா முகம்மதின் மீது சாய்ந்தான். தன் ஆருயிர்த் தோழனைத் தானே கொன்று விட் டோம் என்ற அதிர்ச்சி சாமான்ய மானதா? அந்த வேகத்தில் நண்பன் மீது அவன் விழுந்தான்.

"அடேடே! வலிக்குதப்பா! மாடு மாதிரி மேலே விழுகிறாயே!" என்று சிரித்துக் கொண்டே திடீ ரென எழுந்தான் நயினா முகம்மது! அழகு வியப்போடு, "நயினா? நீ சாகவில்லை?" என்று கேட்டான்.

"குறிபார்ப்பதில் உனக்குயாருமே ஈடில்லை அழகப்பா! நல்லவேளை நீ பார்த்த குறிக்கு இது உண்மை யான ரிவால்வராக இல்லாமல் விளையாட்டுத்துப்பாக்கியாகப் போய் விட்டது!

"உம்-உம்! புறப்படு! புறப்படு!" என்று அனைவரையும் காரிலே உட் காரச்சொல்லி அவசரப் படுத்தி னான். புதுவாழ்வு பெற்றது போன்ற பூரிப்பில் எல்லோரும் கார் பய ணத்தை மீண்டும் தொடங்கினர்!

✶

சிந்தாமணியை மாளிகையின் மாடி யிலே விட்டு விட்டு விடிவெந்த சிவ நேசர், சிவகாமி இருவரும் மாப் பிள்ளை வீட்டாரை வரவேற்கக் காத் திருந்தனர். குறிப்பிட்ட நேரத்திற்கு சிறிது தாமதமாக—ஆனாலும் ஜோசி யர் சொன்ன நாழிகையில் சிறிதும் தவறாமல் மாப்பிள்ளை கார் சிந்தா மணியின் வீட்டு வாசலில் வந்து நின்றது! சிவநேசரும் சிவகாமியும் அவர்களை எதிர்கொண்டழைத்து உபசரித்தனர்.

"மாப்பிள்ளை வரமாட்டார் என் றல்லவா நினைத்தேன்" என்றார் சிவநேசர்.

"அவருக்கு வர இஷ்டமில்லைதான் நான்தான் கட்டாயப் படுத்தி இழுத்து வந்தேன்" என்று தன்னைத் தானே அறிமுகப் படுத்திக்கொண்டு நயினா முகம்மது பதில் கூறினான்.

"மாப்பிள்ளை இப்போது வீட் டுக்கு வர பொருத்தம் சரியில்லை! அடுத்த மாதந்தான் வரலாமென்று பஞ்சாங்கத்தில் போட்டிருக்கிறது! அதனால்தான் அவர் வரவேண்டாம் —அப்படின்னு... நினைச்சேன்!" என்று இழுத்தார் சிவநேசர். அவ ரது சனாதன உள்ளம். சடங்குகள், சாஸ்திரங்களுக்கு அடிமைப்பட்ட உள்ளம் கிரக பலனுக்கு விரோத மாக மாப்பிள்ளை வருகை தந்ததை ஏற்க மறுத்து விட்டது. அதை வெளியில் காட்டாமலும் அவரால் இருக்க முடியவில்லை.

"கிரகம் சரியில்லா விட்டாலும், ஏதோ தோஷம் கழிச்சா சரியாப் போயிடும்னு சொன்னார் ஜோசியர்! அதனால்தான் பையனை அழைச்சு கிட்டு வந்தோம்!"

"தோஷம் கழிப்பதாவது ஒண்ணா வது; அதெல்லாம் பித்தலாட்டம்! ஜோசியன் பிழைப்புக்காக புளுகு வது!" என்று சற்று காரமாகப் பதில் சொன்னார் சிவநேசர்!

"கிரக பலன் போட்டிருக்கிற அதே பஞ்சாங்கத்திலேதான் தோஷ நிவர்த்தியும் போட்டிருக்கிறதாக ஜோசியர் சொன்னாரே!" என்றான் நயினா!

"அட உமக்கென்னப்பா தெரி யும், நீர் வேறே மதம். நாங்கவேறே மதம்!" என்று கடுமையாகப் பேசி பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சிவநேசர். அழகப்பனின் முகத்தை நயினா கிண்டலாகப் பார்த்துச் சிரித் தான். அழகு முகத்தில் அசடு வழிந்தது. நயினாவுக்கு இந்த மாதிரி தாக்குதல் எல்லாம் சாதா ரணம்! பிறகு தாயாரம்மாள் வழி யில் திருடர்களிடமிருந்து தப்பிய கதையைக் கூறினாள். "எல்லாம் கிரக பலனை மீறியதால் வந்த வினை தான்!" என்று சிவநேசர் இடித் துக் காட்டினார்.

இன்னும் ஒரு தடவை இப்படி ஏதாவது சொல்லியிருப்பாரே யானால் அழகப்பன், தாயாரை அழைத்துக் கொண்டு பெங்களூர் திரும்பியிருப்பான்; அவ்வளவு ஆத் திரம் ஏற்பட்டுவிட்டது அவனுக்கு! வீட்டுக்கு வந்தவர்களிடம் இப்படிப் பேசினால் தவறாக எண்ணிக் கொள்ள மாட்டார்களா என்று சிவ காமி அறிவுறுத்திய பிறகுதான் சிவநேசர் சிறிது அடங்கினார். தாயா ரம்மாளின் பார்வை வீடு முழுதும் சுழன்றுகொண்டிருந்தது. அவன் கண்களுக்கு சரியான ஒளியில்லாத காரணத்தால் மிகமிகக் கூர்ந்து எல்லா திசைகளிலும் பார்வை ஓட் டினான். அதே நிலைதான் அழகப்ப னுக்கும்! சிவகாமி, கடைசியாக

★ மு. கருணாநிதி ★

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

சாம்பல் மேடு...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

வந்தவன் அந்த நாட்டியக்காரியின் வீட்டு வாசலிலே வந்து நின்றான்; அவன் கட்டளையிடுவதற்கு முன்பாகவே அவன் கரங்கள் கதவைத் தட்டின; முகில் திரை நீக்கி எட்டிப் பார்க்கும் முழுநிலா போல, கதவைத் திறந்து தன் கையிலே இருந்த விளக்கை சற்று உயர்த்திப் பிடித்து உற்றுப் பார்த்தாள் திலகா!

அந்தப் புதிய மனிதரின் திடீர் விஜயத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை! அகலத் திறந்த விழிகளால் அவனை உற்றுப் பார்த்தாள்; திருமலை தன் மாறு வேடத்தைக் கலைத்துவிட்டு,

"தேன்நிலவே! தெரியவில்லையா என்னை; ஏன் இப்படி திகைக்கிறாய்" என்று உணர்ச்சி பெருக்கெடுக்கும் குரலில் கூறியபடியே கதவை நன்றாக திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

அதிர்ச்சியடைந்த திலகா; அந்த புதிய மனிதன்—மதுரை மன்னன், நாயக வம்சத்தின தளநாயகன் என்பதை அறிந்து ஆச்சரியத்தில் மூழ்கினாள்;

"கோமானே! என்ன இது; என்னை சோதிக்கிறீர்களா? இந்த நள்ளிரவில் — தன்னந் தனியாக... எனக்கு ஒன்றுமே புரியவில்லையே"

"எனக்கே புரியாமல் இருக்கும் போது என் இதயமே! நான் காரணம் என்ன சொல்லப் போகிறேன். நிலா மாடத்தில் வந்து நின்றேன்; வான மண்டலத்தை உற்றுப் பார்த்தேன்; அதற்குமேல் என்னால் அங்கு நிற்கமுடியவில்லை; ஏதோ ஒரு சக்தி, அதற்கு உருவமில்லை; ஆனால் உயிர் மட்டும் இருந்தது. அது என்னை இங்கே கொண்டு வந்துவிட்டது!"

அதற்குமேல் அவர்கள் அதிக நேரம் பேசிக் கொண்டிருக்கவில்லை! இரண்டு உணர்ச்சி மேகங்கள் ஒன்றோடு ஒன்று மோதி அந்த மாளிகையிலே குளிர்மழை பெய்து கொண்டிருந்தது; வெள்ளி முளைப்பதற்கு முன் பிரியா விடை பெற்று அரண்மனைக்குத் திரும்பினான் திருமலை நாயக்கன்!

★

"தேவாலயம் எள்ளி நகையாடப் படுகிறது. ஏறெடுத்துப் பார்க்க நாதியில்லை."

"இந்து மதம் செத்துவிடும் போலிருக்கிறது"

"வேத புராணங்கள், ஆகமங்கள் அலட்சியப் படுத்தப் படுகின்றன"

'மன்னன் மனம் கிருத்துவ மதத்திலே தோய்ந்து விட்டது'

"தப்புக் கணக்குப் போட்டு விட்டோம்; கிருத்துவ மார்க்கம் அவன் சிந்தையை கவராமல் இருப்பதற்குத்தானே தஞ்சையிலே இருந்து 'மீனாட்சி கனவில் வந்தாள்' என்று பொய் கூறி தலைநகரை மதுரைக்கு மாற்றினோம்."

"ஆமாம், இதை இப்படியே வளரவிடக்கூடாது"

"வர்ணாஸ்ரமம் செத்துவிடும் போல் இருக்கிறது."

இப்படி அக்ரகாரத்திலே, ஆரிய வட்டாரத்திலே முனகல் கிளம்பிற்று. திருமலை இந்து மதத்தை புறக்கணிக்கிறான். அர்ச்சனை, உற்சவம், ஆலய வழிபாடு இவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. அரசமாளிகையில் அந்தணர்களுக்கு அரியாசனத்திற்கு சரியாசனம் தரப்படவில்லை என்ற 'வெறுப்பு' ஒவ்வொரு பிராமணனிடமும் விஷமூச்சாக வெளிவந்து கொண்டிருந்தது!

அதே நேரத்தில்...

கனவில் வந்தாளாம்; என் காச நோய் தீருமென்றாளாம்; அவன் பேச்சை நம்பி எத்தனை உற்சவம், எவ்வளவு அர்ச்சனை, அபிஷேகம், ஆராதனை; தங்கக் கலசம் போட்டேன். வைரமுடி வைத்தேன்; மாணிக்கத்தாலான மூக்குத்தி வேறு; அந்த அசையாத கற்சிலைக்கு! இதுவரை புரோகிதர் கூட்டம், வயிறு புடைக்கத் தின்றதுதான் மிச்சம். என் நோய் தீர்ந்தபாடில்லை. அந்த நோய் தீர்க்கும் மாமருந்து—என் திலகாவின் சுந்தர விழிகளிலே தான் தோய்ந்து கிடக்கிறது! அந்த என் இதயத்து மணிவிளக்குதான் இனி என துயர் போக்கும்—சோக இருள் நீக்கும் ஜோதி நிலா! அவளைப் பிரிந்து என்னால் இனி ஒரு வினாடியும் உயிர் வாழ முடியாது!" தனக்குள் இப்படி கூறிக் கொண்டான திருமலை நாயக்கன்.

திலகாவின் கதை துயர இழைகளால் பின்னப்பட்டது. நாடக மன்னனின் இதயத்திலே இன்று இடம் பிடித்துக் கொண்ட ராஜ நர்த்தகி திலகா, ஏற்கெனவே வேறொருவனின் பசிக்கு விருந்தானவள்.

ஒருநாள்; மீனாட்சியின் சன்னதிக்கு பூக்குடலையோடு சேவித்து வரச் சென்றவள், அந்த கோயில் புரோகிதர் கோபால பட்டரின் 'வலையிலே விழுந்து' நாளடைவில்—'உடல் விற்று உயிர் வளர்க்கும் ஜாதிதானே; எப்படியோ ஒருவனோடு காலத்தை ஒழுங்காக நடத்துவோம்' என்ற எண்ணத்தால் கொஞ்சகாலம் புரோகிதரின் பத்தினியாக இருந்து வந்தாள். உண்மையாகவே பட்டரை மனமார நம்பிவிட்டாள் பாவம்!

பொதுவாக தாசிகள் என்றால்—சித்தமுருக்கிடும் வித்தாரக் கள்ளிகள்! இடை குலுக்கி நடை அசைத்து மானிட ஜாதியை மோகத் தட்டிலே புரள விடுபவர்கள்; கொவ்வைக் கனியிதழ் விற்று, கூடிக் கெடுக்கும் குடிகேடிகள்! என்றுதானே சமுதாயம் கருதுகிறது. அதுவும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்; அவர்களின் நிலை; அப்பப்பா, நினைத்திடவும் கூசுகிறது.

ஆண்டவன் பெயரால்; அந்த மாசற்ற பெண்குலம் பொதுச் சொத்தாக; பொருள் கொடுப்போர் நீச்சலடிக்கும் போகக் குளங்களாக கருதப் பட்டனர். அந்தக் குளத்திலே உதித்த கோமளம்தான் திலகா. வாழ்க்கையில் திசைமாறி விட்டாள். கைபிடித்த 'கிளி'யோ முருங்கைக் கிளையாக இருந்தது; என் செய்வாள், இந்த நேரத்தில் தான் திருமலை நாயகனின் பார்வையிலே பட்டு விட்டாள். அவனோ அவளை பட்டத்து ராணியாக்கிவிட துடித்துக் கொண்டிருந்தான்.

அவன் அறியான் அவனைச் சுற்றிலும் உருவாகி வரும் பயங்கரப் புயலை!

அவன் அரசுகட்டில் ஏறும்போதே போரின் புகை அவனை சூழ்ந்து கொண்டது! கோல் கொண்டா மன்னனும், பீஜப்பூர் சுல்தானும், மராட்டிய மலை எலிகளும், அதோடு விஜய நகரத்து அரிமாவும்—அந்த காச நோய் பிடித்து; ஆரிய சிலந்திகள் பின்னிக் கொண்டிருந்த வலையிலே நடுநாயகமாக வீற்றிருந்த நாயக்க மன்னனின் சிந்தையைக் குழப்பிக் கொண்டிருந்தது. இந்த நிலையில், அமைச்சர் இராமப்பய்யரை பகைத்துக் கொள்வது தனக்குத்தானே குழி வெட்டிக் கொள்வது போலல்லவா? திருமலையின் நெஞ்சம் புகை கக்கும் எரிமலையாகி விட்டது.

போர் முழக்கம் ஒரு புறம்! உருண்டுவரும் சூழ்ச்சிக் சக்கரங்கள் மறுபுறம்!

உடல் தின்னும் காச நோய்!

உயிர் வாட்டும் திலகாவின் கயல் விழிகள்!

குழி பறிக்கும் குள்ளநரி ஆரியம்!

இதற்கிடையிலே அரசியல் கொந்தளிப்பு! என்ன செய்வான்? அவன் சித்தம் பேதலித்தது.

திருமலை நாயகனுக்கும். திலகாவிற்கும் எந்த அளவிற்கு காதல் வளர்ந்து கொண்டிருந்ததோ, அந்த அளவிற்கு இராமப்பய்யருக்கும்—மன்னனுக்கும் உள்ளூர பகை வளர்ந்து கொண்டிருந்தது; எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் போர் அம்புகள் பாய்ந்து வந்தன. அவனறியான்—இராமப்பய்யர்தான் அந்த புதிய 'பகை'களைத் தூண்டிவிடும் கர்த்தாவென்று! எப்படி இந்தச் சிக்கலிலிருந்து மீள்வது? இராமப்பய்யரின் தொடர்பை எப்படி அறுத்துக் கொள்வது?

'அரச குலத்திற்கே அபகீர்த்தி; அரசாளப் பிறந்தவன், சல்லாப நிலவோடு சரசமாடித் திரிவதா? சீ! சீ! நாயக்க மண்டலத்தின் பெருமையை மண்ணிலே போட்டு மிதிக்கிறான்; மதத்தை மதியேன் என்கிறான்; மாபாவி.' இப்படிப் புகைச்சல் கிளம்பிற்று பூசுரக் கூட்டம்!

★

திலகாவின் கனியிதழ் சிந்தும் கன்னல் மொழியிலே, பனி விழிகள் தரும் பரவசத்திலே குளிர்ச்சி கண்டு கொண்டிருந்தான் மன்னன்! மணிமகுடம் தரும் இன்பத்தைவிட, அவள் பொன்மடியிலே புது சுகம் இருப்பதாகக் கருதினான். வண்டுபோல் அந்தக் குழல் பூகியை வட்டமிட்டுக் கொண்டிருந்தான் திருமலை!

ஒருநாள் இரவு!

கோபால பட்டரின் வீட்டில்—மந்திரி இராமப்பய்யர் இன்னும் சில பார்ப்பனர்கள் 'மந்திராலோசனை' நடத்திக்கொண்டிருந்தனர். இரவு நெடுநேரம் ஆன பிறகு—பயங்கரமாகச் சிரித்துவிட்டு எழுந்தார் இராமப்பய்யர்!

அப்பப்பா! அந்த மங்கிய விளக்கொளியில் அவர் முகத்தில் நிழலாடிய விஷக்கோடுகள்! துரோகக் கீறல்கள்! வஞ்சகப் புன்னகை! ஒரு 'சாணக்கியனையே' கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்திற்று.

'ஆமாம்! அதுதான் சரியான வழி அப்படித்தான் செய்துவிட வேண்டும்'

இராமப்பய்யரும்—கோபால பட்டரும் ஏதோ ரகசியமாகப் பேசி விட்டுப் பிரிந்து சென்றார்கள்.

★

"திலகா, என் உதய நிலவே! உயிரற்ற மணி முடிக்காக உன்னை மறந்துவிடுவேன் என்றெண்ணாதே; இந்த மதுரை மண்டலமே என்னைப் புறக்கணித்தாலும், நாயக்க சாம்ராஜ்யமே எதிர்த்தாலும், என் ஜீவனே! உன் அழகோவியத்தை என் மனத் திரையிலே இருந்து யாராலும் கலைத்துவிட முடியாது! என் உயிர் சித்திரத்தை எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாது!" என்று கூறி விட்டு அவள் நிலா முகத்தை தன் கரங்களால் உயர்த்திப் பிடித்த படியே; அவளை உற்று நோக்கினான் திருமலை நாயக்கன்.

"இதயக் காவலரே! இந்த இன்பம் என்றுமே நம்மை விட்டு அகலாதிருக்க வேண்டும்" என்று கூறிய படியே அவன் குன்று நிகர் தோள்களிலே சாய்ந்தது அக்குயில்.

அல்லிமலர்! அமுத நிலா! ஒரே மயக்கம்! நான்கு விழிகள் ஒன்றை ஒன்று கவ்வின. உணர்வோடு உணர்வு, உயிரோடு உயிர், சினங் கொண்ட பாம்புகளைப் போலப் பின்னிக் கொண்டன. அந்த அழகியின்

★ 10 தொடர்ச்சி-ம் பக்கம்



[கருணானந்தம்]

மானஉணர் வில்லா மரத்தமிழர் ஆட்சியிலே
ஈன நிலைபோக்க எள்ளளவும் மார்க்கமில்லை;
போனதெல்லாம் போகட்டும்! புத்தறிவு பெற்றிடுவோம்!
ஆனவரை பார்ப்போம்! அயராதே தென்னவனே!
வாழும் வடநாட்டார் வஞ்சகத்தால் இந்நிலத்தைத்
தாழும் நிலையாக்கித் தம்கையில் சிக்கவைத்துச்
சூழும் துயர்நமக்கே சொந்தமெனத் தந்துவிட்டார்!
வீழும் விதம் தெரிந்தோம்; வீரமுடன் போரிடுவோம்!
நாடு நமதே மொழி நமதே! நாட்டிலுள்ள
ஈடு நிகரற்ற செல்வம், இயற்கைவளம்,
பாடும் கடல், மலைகள், பாங்கான வரலாறு
கூடும் நமக்கெதிராய்க் கூறவில்லை! இனியென்ன?
பாராண்ட வேந்தர் பரம்பரையே; தென்னகத்துச்
சீரார்ந்த செல்வத் திருச்சிராப் பள்ளிக்கு
வாராய், அணிஅணியாய், வள்ளுவர் மாநகர்க்குப்;
போராடும் நேரமிது போது!

★ திருமணம் ★

கடந்த 23 4 56 அன்று காஞ்சி வி. கிருஷ்ணன் அவர்களுக்கும், சைதை நடேசனார் மகள் இராசாம்பாளுக்கும் சைதாப்பேட்டையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. விழாவில் திரு. தெய்வசிகாமணி, எம்.எல்.ஏ, காஞ்சி கலியாணசுந்தரம், ஏ கே. வில்வம், சி. வி. எம். அண்ணாமலை, புலவர் நன்னன், பி ஓ எல். ஆகியோர் பேசினர். 'முரசொலி' வளர்ச்சிக்காக மணமக்களிடமிருந்து ரு 2-0-0 அன்புடன் வரப்பெற்றோம். வாழ்க மணமக்கள்.

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு.

திருச்சியில், 17, 18, 19, 20-ல்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத்திடலில் அமைந்துள்ள

வள்ளுவர் நகரில் நடைபெறும்

★

நிகழ்ச்சி நிரல்:

17—5—56 வியாழன்

காலை 9 மணி ஊர்வலம் துவக்கம். [திருச்சி சிந்தாமணியிலிருந்து வள்ளுவர் நகருக்கு] பகல்: 1 மணிக்கு கொடியேற்றுவிழா, மாநாட்டுத் தலைவர்.

1-30 லிருந்து 4 மணி வரை இடைவேளை.

மாலை 4 மணி புத்தர் வரலாறு வில்லுப்பாட்டு கலைவாணர், என். எஸ். கிருஷ்ணன்

5-மணி கண்காட்சித் திறப்பு விழா: துணைப்பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன்

5-30 இன்னிசை அரங்கு: நடிப்பிசைப் புலவர், கே. ஆர். இராமசாமி

6-30 நாதசுர இசை அரங்கு: இசைப்பெரும் புலவர். திருவாவடுதுறை இராசரத்தினம்.

இரவு 8மணி விருது வழங்குதல் மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அவர்கட்கு. அறிஞர் அண்ணு பாராட்டுரை.

8-30லிருந்து 10 மணி வரை இடைவேளை

10 மணி 'புது வெள்ளம்' நாடகம்: இலட்சிய நடிகர், எஸ். எஸ். இசேந்திரன் குழுவினர்.

★

18—5—56 வெள்ளி

காலை: 7-30 லிருந்து 8 வரை பிரதிநிதிகள் கூட்டம்.

9 மணி இன்னிசை அரங்கு இசை முரசு அனிபா

10 மணி இசைச் செல்வி, ஜி. கஸ்தூரி

11-மணி துவக்க உரை: தோழர் ஜி. பி. சோமசுந்தரம்.

12 மணி வரவேற்புரை. தோழர் அ. பெ. தருமலிங்கம்

பகல் 1 லிருந்து 3-30 வரை இடை வேளை.

3-30 இன்னிசை அரங்கு இசைக்குயில் பி. எஸ். செல்வா

4-30 தலைவரை முன்மொழிதல்

4-45 வழி மொழிதல்,

6 மணி தலைவர் முன்னுரை இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,

இரவு 8 லிருந்து 10 வரை இடை வேளை

10 மணி: 'மணி மகுடம்' நாடகம். இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் குழுவினர்.

★

19-5-56 சனி காலை 9 மணி

சிறப்புச் சொற்பொழிவுகள்

'விடுதலைக் கிளர்ச்சிகள்'
கே. ஏ. மதியழகன் பி. ஏ.

'தொழிலியல் புரட்சி'
காஞ்சி, கல்யாண சுந்தரம்

'உரிமைக் கிளர்ச்சிகள்'
அருண்மொழி பி. ஏ. எல்.

'ஜனநாயகம்'
கி. மனோகரன் பி. ஏ. ஆனர்ஸ்

'கல்வித்திட்டம்'
வி. ஜி. இராசையா பி.ஏ. எல்.டி.

'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு'
தில்லை வில்லாளன் எம்.ஏ.

'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்'
க. அன்பழகன் எம்.ஏ.

'தனிநாடு அமைப்பும், பொருளாதார வசதிகளும்'
என். எஸ். இளங்கோ

'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்'
மு. கருணாநிதி

பகல்: 1-30 முதல் மாலை 3-30 வரை இடைவேளை

'தாய்க்குல வரலாறு'
சத்தியவாணி முத்து

'மொழிப் பிரச்சினைகள்'
கண்ணதாசன்

'கலையில் கருத்துப் புரட்சி'
சி. பி. சிற்றரசு

'தத்துவ வரலாறு'
டி. கே. சீனிவாசன்

'புத்தர் நெறி'
ஏ. வி. பி ஆசைத்தம்பி

'உலகைத் திருத்திய உத்தமர்கள்'
அரங்கண்ணல்

'உலக அமைதி'
ப. உ. சண்முகம்

'மறைந்த இயக்க மாவீரர்கள்'
என். வி. நடராஜன்

'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்'
ஈ. வெ. கி. சம்பத்

8-30 லிருந்து 10 இடை வேளை

10 மணி 'அட்வகேட் அமரன்' நாடகம், புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்.

★

20—5—56 ஞாயிறு

காலை 7-30 லிருந்து 8-30வரை பிரதிநிதிகள் கூட்டம் தீர்மானங்கள் நிறைவேற்றல்

பகல் 1-30 லிருந்து 3-30 வரை இடைவேளை

3-30 தீர்மானங்கள் நிறைவேற்றல்

6 மணி; அறிஞர் அண்ணு சிறப்புரை.

இரவு 7-30 தலைவர் முடிவுரை

8 மணி நன்றியுரை.

8-30லிருந்து 10 இடைவேளை

10மணி: 'சுமைதாங்கி' நாடகம் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்.

★ புத்தன் - பவுத்தனல்ல! ★

பார்ப்பனீயத்தின் முதல் பகிரங்கப் பகைவன்! பகுத்தறிவுப் பேராற்றை மக்கள்பால் மடைகோலி விட்ட மாவீரன்! அகிலத்துக்கெல்லாம் அறிவு கொளுத்திய ஆசியாவின் ஜோதி! வேசியாக, சமுதாயக் குட்டையிலே மிதக்கும் பாசியாக, வாழ்ந்தோரையெல்லாம் அன்பு மார்க்கத்துக்கு அழைத்துச் சென்ற அறிஞர் பெருந்தகை! ஆற்றலரசன்! சனாதன தர்மத்தைப் பூக்காமல் காய்க்காமல் வேரோடு சாய்க்க வந்த வெற்றிச் சிங்கம்! ஈட்டி கொண்டு சுற்றி வந்த பகைவரையெல்லாம் புன்சிரிப்பால் பணிய வைக்கும் பண்பின் பெட்டகம்! நாதியற்றோராய், நலிவு மிக்கோராய் இந்து மதத்தால் நடத்தப்பட்டோரை எல்லாம் வாரியெடுத்து வழிகாட்டி பிற்போக்காளரின் மானம் மறையும் வண்ணம் அவர்களைக் காரி உமிழ்ந்த அந்தப் போதிமரத்துப் புத்தன் பிறந்த நாள் விழா அண்மையில் வருகிறது.

சாத்திரம் கண்டோர் அது சூத்திரனுக்கு ஒவ்வாது எனச் சட்டமும் செய்தார்.

மேல் வருணம் கீழ் வருணம் காட்டி. எது வரினும் அதை மாற்றேமென்று சூளுரைத்து நின்றார்.

—இவ்வாறெல்லாம் தர்ப்பையைக் காட்டித் தொப்பை வளர்த்து வந்தோரை எதிர்த்து கச்சை கட்டிக் களத்திலே குதித்தான் கபில வாஸ்துவின் காவலன்!

சாணிக்குப் பொட்டிட்டு சாமியென்று கும்பிடச் சொல்லவில்லை அவன்! கோவில் குளம் அமைத்து. நாவில் நுழையாத மந்திரம் ஜெபித்து சாவில்மகிழ்வதற்குச் சொர்க்கம் தேடச் சொன்னது கிடையாது;

வாழச் சொன்னான்; அறனும், அன்பும் வாழ்க்கைக் கணக்கைத் தீர்த்து வைக்கும் வாய்ப்பாடு என்று பாடம் புகன்றான்; மூட வழக்கங்களையும் முடைநாற்றக் கருத்துக்களையும் தடையின்றிச் சாக்கடையிலே கொட்டி விட்டு பகுத்தறிவின்பால் தஞ்சம் அடைக என்று துந்துபி முழக்கினான்.

அவன் பகவான் அவதாரமல்ல; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி விட்ட பெரியார் ராமசாமி! வள்ளுவரை வாரிசு கொண்டாடக் கூடிய நல்லிளஞ் சிங்கம்தான் அறத்துக்கு மகுடம் புனைவித்தக் கௌதமனென்னும் தங்கம்!

அவன் ஸ்தாபித்ததை மதமென்று கூறுவோர் அவன் மாற்றைக் குறைப்பதாகத்தான் கருத வேண்டும். ஏனெனில் திருவள்ளுவரை ஒரு மதத் தலைவர் என்று சொல்லலாமா? அதைப் போலத்தான் புத்தனும்—போதகனே தவிர மத ஸ்தாபகனல்ல!

இருந்தும் புத்தனை பவுத்த மத ஸ்தாபகனாக்கிவிட்டார்கள் அவன் பின் வந்தோர்!

—இதிலேகூட நாம் விளக்கம் பெறவேண்டும்.

புத்தனுக்குக் கோவில் எழுப்பி. அவனைக் கடவுளாக்கியவர்கள் யார் தெரியுமா?

அசல் ஆரியர்கள் செய்த வேலை இது!

ஆச்சரியமாக இருக்கிறதா? 'பகைவனை உறவாடிக் கெடு' —என்ற பழமொழி கேட்டதில்லை? அதன் கர்த்தாக்களே ஆரியர்கள்தான்!

புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று பிரச்சாரம் செய்தார்கள். மச்சாவதாரம், வாமனவதாரம் — போன்ற தசாவதாரங்களில் 'புத்தாவதாரமும்' ஒன்று என்பதே இதற்குச் சான்று!

இப்படியெல்லாம் பித்தலாட்டங்கள் புரிந்தார்கள், ஆரியர்கள் அதன் பலன்?

பவுத்தம் இந்துமதப் படுகுழியிலே வீழ்ந்தது. புத்தனைக் கடவுளாக்கி; அவன் போதனைகளைச் செல்லாக் காசாக்கி விட்டார்கள்!

உலகத்தின் முதல் சுயமரியாதை இயக்கம் கண்ட கௌதமனின் கொள்கைகள் இப்படித்தான் கண்டதுண்டமாகச் சிதைக்கப்பட்டன! அவன் பிறந்த நாளில் நாம் எடுத்துக் கொள்ளும் சபதம் ஆரியத்தை அழிப்போம்—என்பதாகத்தான் இருக்கவேண்டும்!

★

★ 3-ம் பக்கத் தொடர்ச்சி

மாவட்டமிருந்து வருகின்றதானே! பூனைக்கண் வெள்ளையர் போன பின்னர், பானை வயிற்றுப் பார்ப்பனர்க்கும், வட நாட்டவருக்கும் போட்டு வைத்த பள்ளயமாய் படையலாய், பழந் தமிழ்நாடு ஆகி விடுதல் ஆகாதென சங்கம் ஒலிக்கும் இயக்கத்தின் பெரு வீரன! அவர் முன் நடக்க வருகின்றார் நாஞ்சில் வீரர் திருச்சி நோக்கி!

கே. டி. எஸ். மணி

அண்ணா பிறந்த மாவட்டம் ஆர்வமிகு செங்கற்பட்டு! ஆங்கு மணி யென்றோர் காளை! உரத்த குரலிலே உரிமை முழக்கமிடும் தோழன்! உருவில் கம்பீரன! அனைனேன் அணிவகுப்பில் அண்ணாவின் மாவட்டம்— தலைவன் பிறந்த தரணி—திருச்சிக்கு வந்து சேரும்!

தமிழகத்துப் பகுதியெனும் சித்தூரில் தளராது பணியாற்றும் மாவட்டச் செயலாளர் பார்த்த சாரதி — அவர் கோர்த்தெடுத்த முத்தாரமெனும் அணிவகுப்பை அழைத்து வருவார் திருச்சிக்கு!

பெங்களூர் பதி

கன்னட மாவட்டந் தந்த கனிவு மொழிச் செல்வன-காரியமாற்றுவதில் சூரன—கடமை கட்டுப்பாடெனும் கழகக் கொள்கைகளை உடமையாகக் கொண்டோன. சதி புரியும் மாற்றாரை சூழ்ந்தெதிர்க்கும் வீரன — பதியெனும் பாட்டாளி நண்பன் — அவர் முழக்கம் கேட்டவாறு கர்நாடகப் பகுதி திருச்சிக்கு நடைபோடும்!

உலகெங்கும் பரவிக் கிடக்கிற தமிழரெல்லாம் உரிமைப் போர் முழக்குமிடத்திற்கு வருகின்றோம் என உரைத்து விட்டார் "யாரெல்லாம் வருவார்கள ?" எனக் கேட்டு கேலி புரிந்தவர்கள் "அவரெல்லாம் இவரெல்லாம் வந்தாரா !" எனக் கேட்டு அதிர்ச்சியுறத்தான போகின்றார்கள்! "திராவிடத்தின் வரலாற்றுத் திருப்புமுனை யொன்றைக் காணுகின்ற பெரு வாய்ப்பு கிடைத்ததடா மகனே !" என்று நீ சொல்லத்தான் போகிறாய் !

மாநாட்டுப்பந்தலைக்கண்டாலே உனக்கு எங்கள் ஆற்றலபுரியும்! வெம்மை பொழியும் சூரியனை மறைக்க மட்டுமல்ல; வெயிற் கொடுமை தெரியாமல பாதுகாக்கவும் முன்னேற்பாடாகப் பந்தல் அமைகிறது !

பொட்டற்காடுதான் - அதைப் பொழிலாக மாற்றி யிருக்கின்றார்கள் திருச்சி தோழர்கள ! தேவையான பொருள்களைப் பெற— உலவிவர-ஓய்வு பெற—எல்லா வற்றுக்கும வசதியாக வள்ளுவர் நகரம அமைக்கப் பட்டிருக்கிறது;

தண்ணீருக்குப் பஞ்சமில்லாத படி தக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு விட்டன. தனி ரயில்கள் விடுவதற்கு சம்மதம் அளித்து விட்டனர் அதிகாரிகள.

ஏராளமான தனி பஸ்கள் மாநாட்டுப் பந்தலுக்கும், திருச்சி நகருக்குமாக போயக் கொண்டிருக்கும !

பந்தலிலே முக்கிய இடங்களிலே 'டெலிபோன' வசதிகள செய்யப்பட்டு விட்டன.

சிற்றுண்டி சாலைகள்-பேருண்டி விடுதிகள—கடைத்தெருக்கள — மருத்துவ மனைகள — கண்காட்சிகள—அனைத்தும் நிறைந்த அழகுப் பட்டினமாக இருக்கும வள்ளுவர் நகர்!

வானொலி நிலையத்தார் மட்டுமே — மாநாட்டை ஒலிபரப்ப மறுத்து விட்டார்களாம் ! பரவாயில்லை; அந்தப பஜனை மடத்திலிருந்து வேறென்ன பதிலை எதிர்பார்க்க முடியும! காலம் மாறுது என்ற நினைப்பு படைத்த கபோதிகள அவர்கள!

மற்ற எல்லா ஏற்பாடுகளும் மாநாட்டைப் பொருத்தவரையில செவ்வனே நடந்துவிட்டன.

நீயும் திருவாரூரில் இருந்த படியே திருச்சி வருவதாக எழுதி விட்டாய்! நான் முன்பே சென்று விடுவேன திருச்சிக்கு! அங்கு சந்திப்போம்—திராவிடப் பெருங்குடி மக்கள் பாட விருக்கும் விடுதலைப் பரணியைக் கேட்போம் — மனங்குளிர்வோம்! ஒன்று சொல்ல மறந்துவிட்டேனேயம்மா —மாநாட்டில போர்த் திட்டங்கள் வகுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறாய் அல்லவா; அதுபற்றித்தான!

தி. மு. கழகமே போர்க்களத்தில் நிற்கும் கழகந்தானே தாயே! நிச்சயமாகப் போர்த் திட்டங்கள் வகுக்கப்படலாம்! அதற்கான நாள் குறிக்கப்படலாம்! எச்சரிக்கை வழங்கப்படலாம்! அப்படி திட்டம் தீட்டப்பட்டால் எனக்கு இப்போதே உன வாழ்த்து தேவையம்மா! கல்லக்குடிக்கு அனுப்பினாயே; களிப்பு மிகுந்த முகத்தோடு — அதே முறுவல் பூத்த முகத்திலே என முகத்தை அணைத்து "சென்றுவாடாமகனே செருமுனைக்கு!" என்ற புறநானூற்றுத் தாயின் வாசகத்தை வழங்கி—தடை இடரப் புறப்படும் படையிலே சேர்ந்திட எனக்கு இப்போதே விடைகொடு தாயே! என்னைப்போல பல தோழர், தங்கள் அன்னையிடம இப்படித்தான விடைபெற்று வருவார்கள திருச்சிப் பாசறைக்கு!

மார்பிலே வேல்தாங்கி வீழ்ந்த மகனைக் கண்டு, மகிழ்ச்சிபெற்ற மாதாவின் மரபல்லவா உன மரபு! அந்தத் தாய்க் குலத்து வழிவந்த என அன்னையே! விடைகொடு எனக்கு—விடுதலைப் படைத் தலைவர் இடுகின்ற கட்டளையை நிறைவேற்ற! போர்த் தழும்பு பெற்று புனித பூமியைக் காப்பாற்ற விடைகொடு தாயே! விடை கொடு!

வீழ்ந்த நாட்டை விடுவிக்க விழுப்புண் பெறுவதற்கு உன அன்பு மைந்தனுக்கு விடைகொடு அம்மா!

இங்ஙனம்,
உன் அன்பு மகன்.

24-4-56 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற கே. வி. கே. சாமி யின் வி. வி. டி. பள்ளித் திறப்புவிழாவில் கலந்துகொள்ள, ஆசிரியர் மு. க. சென்றபோது நகரசபை தந்த வரவேற்பில் ஒரு காட்சி.

சாம்பல் மேடு...

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

இதழ்கள் — தென்றல் படுவதால் மெல்லிய பூவிதழ்கள் நடுங்குவது போல துடித்தன; அந்தத் தோகை மயிலாட்டத்தை உச்சி வானத்துத் தாரகைகள் கண் சிமிட்டி ரசித்துக்கொண்டிருந்தன. 'வருகிறேன் திலகா, நாளை பகல் செத்ததும் பறந்து வருகிறேன்' என்று கூறிவிட்டு எழுந்தான் !

'என் தெய்வத்தின் வருகைக்காக காத்திருப்பேன் ; பக்தையை ஏமாற்றி விடாதீர்கள் !"

'திலகா ! நாயக்க மண்டலத்தின் செங்கோல் இனி உன் சுந்தர விழிகளுக்கு முன்னால் சுற்றும் பம்பரக்கோல்—சரிதானே' என்று கூறி ஆசையோடு அவள் மாம்பழக் கன்னங்களைத் தட்டிக் கொடுத்து விட்டு பிரியா விடை பெற்றுச் சென்றான் திருமலை நாயக்கன்.

★

இரவு மணி நான்கு ! நிலவு மேகச் சேற்றில் புதைந்து விட்டதால் மங்கலான இருள் சூழ்ந்து விட்டது. வைகறை நேரம். பறவைகளின் பலரகக் கூச்சல் காதைத் துளைத்தன. மாறுவேடத்தோடு. அந்தப் பெரிய தென்னஞ் சாலையைக் கடந்து வந்து கொண்டிருந்தான் மதுரை மன்னன் திருமலை. ஐந்தாறு முரட்டு மனிதர்கள் அவனை திடீரென்று சூழ்ந்து கொண்டனர்; நள்ளிரவு. நிராயுதபாணி. அவன் உடலிலே ஒரே சமயத்தில் ஐந்தாறு கட்டாரிகள் பாய்ந்தன. 'அய்யோ!' என்ற அலறல் கேட்டு கிளைகளிலே இருந்த பறவைகளெல்லாம் அச்சத்தால் மிரண்டோடின. அவன் மார்பிலே இருந்து 'குபு குபு' வென்று ரத்தம் பொங்கிவழிந்தது. அவன் இருதய ஓட்டம் நின்று வெகுநேரமாகி விட்டது.

இராமப்பையரும், கோபால பட்டரும், அங்கிருந்து வேகமாக ஓடி மறைந்தனர்.

விடிந்ததும், மதுரைமா நகரம் எங்கும் ஒரே ரகளை; மூலைக்கு மூலை மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று ஏதோ பேசிக் கொண்டனர்; ஒருவரை யொருவர் பிரேதக்களை சொட்ட பார்த்துக் கொண்டு நடந்தனர்.

செய்தியறிந்த திலகா, தீக்குண்டத்தில் விழுந்த சிட்டுக் குருவி போல துடித்தாள்; கோவெனக் கதறினாள்; கண்ணீர் வடித்தாள்; அதற்கு மேல்...! அன்று மாலை திருமலை நாயக்கனின் பொன்னுடல் மயானத்திலே தீயின் சிவப்பு நாக்குகளால் கருகிக் கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில்; மதுரை அரண்மனையின் ராஜநர்த்தகி-ஆடலழகி மன்னவன் காதலி திலகாவின் தங்கவுடல் மயானத்தைநோக்கி வந்து கொண்டிருந்தது ஆம்! அவள் உடல் ஜில் விட்டுப் போனதால் அவளையும் அங்கேகொண்டுவந்து எரித்துவிட்டார்கள்: 'மனிதர்கள்!'

நடுப்பாதையிலே நாதியற்ற பிணம் ! நாயக்க மண்டலத்தின் சாம்பல் மேடு ! அதிலே அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான் திருமலை நாயக்கன் !

இருள்படிந்த சரித்திரத் திரைக்குப்பின்னால் அந்த நாயக்க வம்சத்தின் 'சாம்பல்மேடு' இன்னும் குமுறிக்கொண்டே இருக்கிறது.

★

ஆயிரம் ஆயிரமாக ரூபாயைக் கொட்டி மருந்து வாங்கிக் கொடுத்த, நோடாளி பிழைப்பாரா மாட்டாரா—என்று காத்துக் கொண்டிருக்கும்போது மனித நெஞ்சம் என்ன பாடுபடும்! அதைப் போலத்தான் 'பரீட்சை' முடிவு என்ன ஆதமோ என்ற துடிப்புடன் காத்துக் கிடந்தார்கள் பையன்கள்!

சோமுவுக்கு அந்தக் கவலேயே கிடையாது. அவன் ஏழைதான்; அவன் தகதை பண்ணையார் வீட்டு வேலேக்காரன்தான்; ஆனாலும் சோமு என்னவோ படிப்பை பொறுத்தமட்டில் பெரும் பணக்காரன்! மற்ற மாணவர்கள் பொருமைப்படுகிற அளவுக்கு அத்தகைய புத்திசாலி!

அவனுக்கு நேர் எதிரானவன் பண்ணையார் மகன் ரவி. படிப்பு என்ருலே அவனுக்கு கசப்பு! 'பள்ளிக்கென்று தனிக் கட்டிடம் ஏன்? அது வீண் செலவுதானே! அழகான மாந்தோப்பிலே—அருமையான நிழலிலேயே நடத்தினுல் என்ன?...நான் மட்டும் கல்வி மந்திரியாக வந்தால்...'-இப்படியெல்லாம் யோசனைகள் சொல்லக் கூடிய அளவுக்கு படிப்பில் புலி!

பரீட்சை முடிந்த அன்று...

"என்னடா சோமு! பரீட்சை எல்லாம் எப்படி எழுதி யிருக்கே?" என்று கேட்டான் அவன், சோமுவைப் பார்த்து.

"அடுத்தஆண்டு எட்டாம் வகுப்பு நிச்சயம்!...அதிருக்கட்டும்; நீங்கள் ..." — சின்ன முதலாளியாயிற்றே; சற்று மரியாதையாகவே பேசினுன் சோமு.

"நானு? நான் போனதே ஒரு நாள் பரீட்சைக்குத்தானே!..."

"என்ன...?"

"பின்னே என்னடா சோமு, ஊரிலே திருவிழா நடக்கிறபோது பரீட்சை வைக்கலாமா?...திருவிழா காட்சிகளேவிட இந்தப் பரீட்சை ஒரு பெரிசா என்ன?"

சோமு சிரித்துக் கொண்டே போய் விட்டான்!

இப்போதும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறுன். நம்பிக்கை உள்ளவனுக்கு நடுக்கம் ஏன் ஏற்படப் போகிறது?

★

"நடுக்கம் ஏன் அய்யா?...ம்... பிடியும்...அட, பிடியுமய்யா என்ருல்..."

'குற்றம் செய்; குற்றம் செய்!' என்று தூண்டும் தோரணையில் எதிரே பண்ணையார்—'காலமெல்லாம் என்னேக் காண முடியாது உன்ருல்; அழைத்துக் கொள் என்னே' என்று ஆசை காட்டும் அவரது கையிலிருக்கும் கத்தை நோட்டுகள்-

இதற்கிடையில் 'என்ன செய்வது?' என்ற ஏதும் புரியாத நிலேயில் பள்ளி ஆசிரியர்!

"பிடிய்யா!"-பண்ணையார் மீண்டும் அவசரப்படுத்தினுர்.

"என்னங்க! பரீட்சையே எழுதலியே ரவி! ஒரே பரீட்சைதான் எழுதினுன், அதிலும் ஒரே 'மார்க்' குதான் கிடைத்திருக்கு! நான் என்ன செய்வது?"

"அதுக்குத்தானேய்யா இந்தப் பணம்! பெரிய பரிட்சை — பணத்துக்கு முன்னே என்னய்யா செய்யும் அது?...ம்..."

"இல்லிங்க...நான் பரீட்சையிலே தோற்றுப் போன பையன்களின் எண்ணிக்கை, வெற்றி பெற்ற பையன்களின் எண்ணிக்கை யெல்லாம் எழுதி பெரிய

அதிகாரிக்கு அனுப்பிட்டேனே! இப்ப எப்படிங்க மாற்றம் செய்ய முடியும்? முடியாதே!" — தவறு செய்ய விரும்பாத ஆசிரியர் உண்மையைச் சொன்னுர்.

பண்ணையாருக்குக் கோபம் வந்து விட்டது. பணத்தை நீட்டினுல் கடல் அலேகள்கூட காலில் விழும் என்ற கொள்கையுடையவர் அவர். "அதனுல் என்னய்யா! எண்ணிக்கையைத்தானே அனுப்பி யிருக்கே; பெயர்களே எல்லாம் அனுப்பலியே; இங்கேயே ஒரு மாற்றம் செய்திடேன்—ஆள் மாற்றம்!"

"அப்படி யென்ருல்...?"

"இதெல்லாம் சொல்லியாய்யா தெரியணும்! என் கையிலிருக்கும் பணத்தைப் பார்; அது ஆயிரத்தெட்டு வழி சொல்லுமே!...வெற்றி பெற்ற யாராவது ஒருவனே தோற்றவனுக்கி, அந்த இடத்திலே ரவீயின் பெயரை..."

"ஐயையோ! நான் மாட்டேன்! மாட்டவே மாட்டேன்! இது துரோகம் -மாபெரும் துரோகம்"-ஏழைஆசிரியர் அலறினுர்!

"கோபத்தைக் கிளருதே கிழவா! பேசுவது பண்ணையார்! ஞாபகமிருக்கட்டும்; வேண்டுமானுல் இன்னும் கொஞ்சம் பணம் வாங்கிக்கொள்!" -பண்ணையாரின் கைகள் மீசையை முறுக்கிக் கொண்டிருந்தன. அவரது கொடூரம் நிறைந்த கண்களேப் பார்க்கவே பயந்த ஆசிரியர் 'சடா' ரென்று தலேயைத் திருப்பிக் கொண்டார். ஜன்னலின் வழியாக அவரது கண்கள் தூரத்திலே இருந்த அவரது குடிசையைக் கவனித்து விட்டன. ஆசிரியன்—நாளேய மேதைகளே உருவாக்கும் சிற்பி—அவன் வசிப்பதற்கோ ஓட்டைக் குடிசை! ஆசிரியர் எண்ண மிட்டார்.

"என்ன வாத்தியாரே! முடியுமா, முடியாதா? என்னேப் பகைத்துக் கொண்டால்...கவன மிருக்கட்டும்... தெருவிலே நடக்க முடியாது...ம்..." —பண்ணையார் உறுமினுர்.

ஆசிரியர் வேகமாகத் திரும்பினுர். பணக் கத்தையைப் பார்த்தார். ஆவலுடன் பாய்ந்தார். ஆனுல்...ஏனே 'சடக்'கென்று நின்ருர்.

'குப்'பென்று சிவந்துவிட்டது அவரது முகம். அவரது மனதிலே நிகழ்ந்து கொண்டிருந்த பெரும் போராட்டத்தை எடுத்துக் காட்டியது. அதன் முடிவோ...

"ஐயா! என்னுல் முடியாது! முடியவே முடியாது! நான் இன்று வரை யாருக்கும் துரோகம் செய்யாதவன்! பணத்தைக்காட்டி என்னேப் பாழாக்காதீர்கள்! போங்கள்; போய்விடுங்கள்!" என்று அறையை விட்டு வெளியே ஓடினுர்.

பண்ணையாரின் முகம் சிவந்தது. மீசைதுடிதுடித்தது. மூளேயோ பயங்கரமாக வேலேசெய்தது. என்ன செய்வது, அவர் எதிர்பாராதது அல்லவா நடந்து விட்டது!

★

எதிர்பாராததுதான் நடந்து விட்டது! கையிலிருந்த மேலதிகாரியின் உத்தரவைப் பார்த்ததும் ஆசிரியருக்கு உலகமே சுழல்வதுபோலத் தோன்றியது; பிரளயம் வந்து அதிலே தன் குடிசை சுக்குநூருவது போலவும் தோன்றியது!

"உங்கள்மேல் தொடர்ந்து அநேக குற்றச்சாட்டுகள் கிடைத்திருப்பதாலும், மாணவர்களே மிகவும் துன்புறுத்துவதாக அவர்களின் கையொப்பக் கடிதம் கிடைத்திருப்பதாலும். உங்களே வேலேயை விட்டு நீக்கியிருக்கிருேம்"

ஆசிரியரின் கண்கள் இருண்டன. அவரது நடுங்கிய கரங்கள் கையிலிருந்த உத்தரவைக் கிழித்து எரிந்தன.

எங்கிருந்தோ சிரிப்பு சப்தம் கேட்டது. ஆசிரியர் கவனித்தார். பள்ளிக்கூட வாசலில், வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தார் ஒருவர். புதிதாக பள்ளிக்கு வரும் ஆசிரியர் போலும் அவர். அவரை எல்லேயற்ற மகிழ்ச்சியோடு வரவேற்றுக் கொண்டிருந்தார் பண்ணையார்! இரண்டு நாட்களுக்கு முன்பு ஆசிரியர்; பண்ணையார் — இருவருக்குமிடையே நடந்த வாக்குவாதத்தின் விளேவுதான் அது என்பதைப் புரிந்துகொண்டார். வாய்விட்டு அலற வேண்டும்போலிருந்தது அவருக்கு!

★

வாய்விட்டு அலறியே விட்டான் சோமு!

பள்ளிக்கூட மத்திய ஹாலிலே—'பரீட்சை' முடிவுகள் ஓட்டப்பட்டிருந்த தாளிலே—சோமுவின் பெயருக்கு மேலே சிவப்புக் கோடு! அதாவது அவன் தேர்வில் தோற்று விட்டானும்!

சோமுவின் உடல் வியர்த்துக் கொட்டியது. 'அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன செய்வாரோ?' என்ற பயத்துடன் தத்தளித்தான்!

★

தத்தளித்த பள்ளி ஆசிரியர் ஊரைவிட்டே போய்விட்டார்!

சோமுவின் அப்பா, அவனது படிப்பை நிறுத்திவிட்டார்!

ரவியோ தேர்வில் வெற்றி பெற்று விட்டான் — பண்ணையாருக்குக் கொள்ளே மகிழ்ச்சி!

—சொர்ணம்

★ ஆலேக்கூலி! ★

❋

★ கடைவீதிகளில்—நடைபாதை ஓரங்களில் நாம் எத்தனேயோ 'தெருப் பையன்'களே சந்திக்கிருேம். புகைவண்டி நிலேயங்களிலே கூலிகளாகத் திரியும் சிருர்களேப் பார்க்கிருேம் 'பரிதாபம்; பரிதாபம்!' என்று வருந்துகிருேம். ஆனுல், அந்தப் பையன்களின் எதிர்காலம் எப்படி எப்படியோ இருக்கலாம். முயற்சியின் துணையால் அந்த நாடோடிப் பையன் நாடு போற்றும் மேதையாகவும் ஆகலாம். 'இதிலென்ன சந்தேகம்' என்று கேட்கிறது, ஒரு பையனின் சரித்திரம். படியுங்கள்;



★★ 'பசி' என்று கையேந்தி ருசியோடு உண்ணுவதைக் கேவலமாக மதித்தான் அந்தச் சிறுவன் இருந்தாலும் பட்டினி அவனே விடுவதாக இல்லே. அதை விரட்டியடிக்க அவனுக்குத் தாயுமில்லே; தந்தையுமில்லே. என்ன செய்வான்? பாவம், பஞ்சாலே ஒன்றிலே கூலியாக வேலேக்கு அமர்ந்தான்! பத்து வயதுப் பையன்-முதலாளியின் பையைநிரப்ப இயந்திரங்களினூடே இயந்திரமாக உழைத்தான்.

★★★ அந்த ஆலேக் கூலியின் எதிர்காலம் எப்படி மாறிற்று தெரியுமா? உலகப் புகழ்பெற்ற நாவல்கள் பலவற்றை எழுதி—'மேதை' என்று பெயர்பெற்ற 'ரெயினுட்ஸ்' என்பவர்தான் அந்த ஏழைச் சிறுவன்!

கடைசிப் பக்கம்
'எழுத்தாணி'

மூர்த்தி; மாம்பலம்

(?) எங்கள் மகாமகம் — உங்கள் மகாநாடு; இரண்டுக்கும் வித்தியாசம் என்ன?

"மகா" என்பதற்குப் பிறகு "நாடு" என்ற சொல் இணைந்திருப்பதை கவனியும்-இரண்டெழுத்துள்ள மாபெரும் வித்தியாசத்தை உணருவீர்!

சின்னதுரை; பெங்களூர்

(?) தி.மு.க. மாநில மாநாட்டுக்கு நேரு வருவாரா?

இது என்ன எம். எஸ். வீடா; அவர் வலிய வருவதற்கு!

காங்கிரஸ் பிரியன்; விருதுநகர்

(?) மாநில மாநாட்டைப் பற்றி காமராசர் என்ன நினைப்பார் என்று கருதுகிறீர்கள்?

சுதந்திரச் சேனையின் முழக்கத்தைப் பற்றி ஆதிபத்தியக்காரர்களின் எடுபிடிகள் என்ன நினைப்பார்களோ; அதையே தான் அவரும் நினைப்பார்!

பெரியார் தாசன்; திருச்சி

(?) உங்கள் மகாநாட்டைப் பற்றி எங்கள் பெரியார் என்ன கருதுகிறார் தெரியுமா?

உமக்குத் தெரியாது; எமக்குத் தெரியும் — ஒன்றாக இருந்த போது இரண்டுநாள் மாநாடு தான நடத்துவோம்; இப்போது ஐந்துநாள் மாநாடு நடத்துகிறார்களே; பரவாயில்லை பயல்கள் கெட்டிக்காரர்கள் தான என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு மகிழ்வார் எங்கள் பெரியார்!



பெங்களூர்

18-5-56 ஞாயிறு மாலை 5 மணிக்கு 'தீச்சுடர்' வளர்ச்சி நிதிக்காக சர். புட்டண்ணு செட்டி டவுன் ஹால் தோழர் மா. மன்னர் அவர்கள் தலைமையில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் சி.பி.சிற்றரசு ஆகியோர் பேசுவர் இசை. திருமதி கஸ்தூரி

(கட்டணம்; ரு 0-15-9, 0-8-0)

அறிவிப்பு

மாநாட்டு தனி இதழ் எட்டு பக்கங்கள் 15-ந் தேதி வெளிவரும். மு. க. எழுதும் 'நீட்டோலை''

மாநாட்டு சிறப்பிதழ் 25-ந்தேதி அதிக பக்கமுடன் வெளிவரும்.

அறிவிப்பு

மாநாட்டு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில், சில ஊர்களிலிருந்து நமது தோழர்கள் டெலிபோனில் கவலையோடு ஒரு செய்தி பற்றி விசாரிக்கத் தொடங்கியுள்ளார்கள். ஏதோ ஒரு பத்திரிகையில், தி. மு. க. விலிருந்து நான் ராஜினாமா செய்து விட்டதாக நானே கடிதமெழுதி அந்தப பத்திரிகை ஆசிரியருக்குத் தெரிவித்திருப்பது போல், பிரசுரிக்கப் பட்டிருப்பது குறித்தே நமது தோழர்களில் சிலர் இத்தனை பரபரப்புக்கு உள்ளாகி விட்டிருக்கின்றனர். பத்திரிகையின் மீது வந்த கோபத்தைவிட விசாரித்த தோழர்கள் மீதுதான், எனக்கு வருத்தம் உண்டாயிற்று. ஏனெனில் திராவிடக் கழகப் பத்திரிகைகளே பொதுவாகப் பிறர்மீது பழிகளைச் சுமத்துவதில் பொறுப்புணர்ச்சியையோ, கண்ணியத்தையோ கடைப்பிடிப்பதில்லை என்பது நாடறிந்த உண்மையாகும். அதிலும் அந்த கோஷ்டியிலேயே மிக மட்டரகமான கழிசடை வாரப் பத்திரிகையின் செய்தி கண்டு பரபரப்படைகின்றனர் நம்மவர்களில் சிலர், என்னும்போது வருத்தம் மேலிடாமல் என்ன செய்யும்!

அந்த வாரப் பத்திரிகையில் வந்த செய்தி முழுக்க முழுக்க போக்கிரித்தனமான பொய்ச் செய்தி என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்வதுடன், சம்மந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியருக்கும் செய்தி பொய்யானதென்பதை உடனடியாகப் பிரசுரிக்குமாறு பணித்து அறிவித்திருக்கிறேன் - என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன், ஈ. வெ. கி. சம்பத்

அறிஞர், சி.என். அண்ணாதுரை எம். ஏ.			
கலிங்கராணி	3	0	0
ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம	1	8	0
கபோதிபுரக் காதல்	1	0	0
இலட்சிய வரலாறு	1	0	0
ஆரியமாயை	1	0	0
குமரிக்கோட்டம்	1	0	0
உலகப்பெரியார்காந்தி	1	0	0
தீ பரவட்டும்	1	0	0
சிறு கதைகள்	1	0	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
நிலையும் நினைப்பும்	0	12	0
மே தினம்	0	5	0
பிப்ரவரி 20	0	4	0
அவர்கள் சந்திப்பு	0	3	0

நாவலர், இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.			
காதற் காட்சிகள்	2	4	0
மதமும், மூடநம்பிக்கையும்	1	0	0
பண்டைக் கிரேக்கம்	1	0	0
சி. பி. சிற்றரசு			
சாக்கிய சிம்மன்	1	0	0
கொலம்பஸ்	1	0	0
கணவனல்ல!	1	0	0
மு. கருணாநிதி			
இரத்தக் கண்ணீர்	2	0	0
ஆறுமாதக் கடுங்காவல்	2	0	0
நாளாயினி	1	0	0
பழக்கூடை	1	0	0
பரப்பிரமமம்	1	0	0
விடுதலைக் கிளர்ச்சி	1	0	0
முத்தாரம்	0	12	0
பூந்தோட்டம்	0	4	0

தெப்பக்குளம், திருச்சி.

வெள்ளிக்கிழமை...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

மெதுவாக பேச்சை எடுத்து— சிந்தாமணிக்கு ஏற்பட்ட விபத்தைக் கூறினாள்.

தனக்கு ஏற்பட்டமாதிரி தன் மனைவிக்கும் ஒரே நாளில் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதே என எண்ணி வியப்படைந்தான் அழகப்பன். தாயாரம்மாள் சிந்தாமணியை மருத்துவ மனையில் சென்று பார்க்க விரும்பினாள்.

"வரும்போதும் வழியில் சகுனம் சரியில்லை; இங்கும் இப்படி சகுனம் சரியில்லாமல் இருக்கிறது! — அதனால் சிந்தாமணியை இப்போதைக்குப் பார்ப்பது அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை! இன்னொரு நாளைக்கு ..." என்று இழுத்தார் சிவநேசர்!

எல்லாம தலைகீழ் மாற்றமாகி விடவே தாயாரம்மாள் சிறிது அதிர்ச்சி அடைந்தாள். சிவகாமி அதைப் புரிந்துகொண்டு வேதனை கொண்டாள்.

"உடம்பு சுகமில்லாமல் இருக்கிற பெண்ணைப் பார்த்தால் என்ன — எனக்கும் பார்க்க ஆசையிருக்காதா?" என்று பிடிவாதமாகச் சொன்னாள் தாயாரம்மாள்!

நயினாவும் 'ஆமாம்' போட்டான். அழகப்பனும் அதே கருத்தை ஜாடையாகத் தெரிவித்தான்.

எல்லோருமே சாஸ்திரத்துக்கு விரோதமாகப் பேசுவதாக நினைத்தார் சிவநேசர்!

"நீங்கள் எல்லாம் நாஸ்திகர்களா?" என்று தாயாரம்மாளைப் பார்த்து கேலி கலந்த கோபத்தில் கேட்டுவிட்டார்.

"சிவ சிவா;" என்று வாயில் அடித்துக் கொண்டாள் தாயாரம்மாள்.

இறுதியில் சிவநேசர் அபிப்பிராயமே வென்றது. அன்றிரவு மாப்பிள்ளை வீட்டார் ஊருக்குத் திரும்புவதென்றும் இன்னொரு நல்ல நாள் பார்த்து பெண் வீடு பார்க்க வருவதென்றும் முடிவு செய்யப்பட்டது! அழகப்பனும், நயினாவும் ஊர் சுற்றிப் பார்த்து வரப் புறப்பட்டார்கள்! அழகப்பனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றிடது. அதை நயினாவிடம் வெளியிட்டான்.

"சிந்தாமணியை நாம் பார்க்க இதுதான் தக்க சமயம்! ஆஸ்பத்திரியில் போய் தாராளமாகப் பார்த்து விட்டு வரலாம், என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான். நயினா சம்மதிக்காமலிருக்க முடியுமா?

இருவரும், ஆனந்தியின் மருத்துவ மனையை விசாரித்துக் கொண்டு போய்ச் சேர்ந்தனர். அங்கே டைகர் இருந்தான். ஆனந்தி இருந்தாள். சிந்தாமணியைப் பார்க்க வேண்டுமென்று அழகப்பன் கூறினான். ஆனந்தி முதலில் மறுத்தாள் பிறகு டைகர் சிபாரிசு செய்தான்; "யாமரா அவளுக்கு சொந்தக்காரர் போலிருக்கிறது, சற்றுதான் பார்த்துப் போக அனுமதி கொடு." என்று!

சொந்தக்காரர் என்ற முறையில் அழகப்பனும், நயினாவும் உள்ளே அனுமதிக்கப் பட்டனர். வேம்பு அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு போய், ஒரு நர்சுவிடம் அறிமுகப்படுத்தி, இவர்களை சிந்தாமணி இருக்குமிடம் அழைத்துப்போ எனக் கூறவிட்டுத் திரும்பினான். நர்சு அவர்களை அழைத்துக் கொண்டு போனாள்.

சிந்தாமணியிடம் தான் யார் என்று சொல்வதா இல்லையா என்ற பிரச்சினை அழகப்பனைக் கலக்கிற்று. அத்தோடு, சிவநேசருக்குத் தெரியாமல் இப்படி வருவது சரியா? என்ற கேள்வியும் குடைந்தது! எப்போதுமே தவறு செய்ய ஆரம்பிக்கிறவனுக்கு ஆரம்பத்திலே ஏற்படுவதை விட அதிக அச்சம் உச்ச நிலைக்குப் போய்ச் சேரும்போது தான் தோன்றுகிறது. அந்த நிலைக்கு ஆளானான் அழகப்பன். நர்சு அவர்களை சிந்தாமணி படுத்திருக்கும் கட்டிலண்டை அழைத்துப் போனாள்.

"உம்! இதுதான் சிந்தாமணி — அயர்ந்த தூக்கம்! எழுப்பாதீர்கள்!" என்றாள் நர்சு!

அழகப்பன் ஆவலோடு அப்பக்கம் நோக்கினான். தீப்பட்டதுபோல் ஆயின அவன் கண்கள்! "ஆ" என்று அலறினான். சிந்தாமணி திடுக்கிட்டு விழித்தாள். அவள் பக்கத்திலே ஒரு குழந்தை.

"ஸ்! சப்தம் போடாதீர்கள் — பிரசவக் களைப்பு — தொல்லை கொடுக்காதீர்கள்" என்றாள் அதிகாரமாக நர்சு!

"அடப் பாவிகளே! நல்லவேளை — நான் தப்பினேன்! இதற்குத்தான் அந்த சிவநேசன் நாள் நட்சத்திரங்கள் மீது பாரத்தைப் போட்டு அவ்வளவு தடுத்தானோ? அட மோசக்காரர்களே!" என்று ஆத்திரத்தோடு கூச்சலிட்டான அழகப்பன். நயினா முதுகில் தட்டி அவன் வாயைப் பொத்திக் கொண்டு வெளியே இழுத்துக் கொண்டு வந்தான.

(தொடரும்)

தென்னகத்து மேடைதோறும் வெற்றிமுரசு கொட்டிவரும்

★ கொள்கை விளக்க ஓவியம்! ★ கொஞ்சு தமிழ்க் காவியம்

மு. கருணாநிதி எழுதிய

மணிமகுடம்

நூல் வடிவில் மாநில மாநாட்டில் கிடைக்கும்

விவரங்கட்கு: முத்துவேல் பதிப்பகம், திருச்சி.

ஆசிரியரும், அச்சிடுபவரும் வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6